வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 06
19.06.2025 வியாழக்கிழமை
இதழ் : 170
பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# மனித உரிமைகள் மீறலில் பொறுப்புகூறலை கோருக

## இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துமாறு மனித உரிமை ஆணையருக்கு அழுத்தம்!

ஜெனிவா, ஜூன் 19

**ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் தனது இலங்கைப் பயணத்தின்போது, "பல தசாப்தங்களாக தீர்க்கப்படாத மனித உரிமைகள் மீறலுக்கு பொறுப்புக்கூறலை கோர வேண்டும்", என்று ஐந்து சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.**

அத்துடன், போர் குற்றங்கள், கட்டாயமாக காணாமல் ஆக்கப்படுதல்கள் திட்டமிட்ட துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க இலங்கை தொடர்ந்தும் தவறி வருவது குறித்து ஆழ்ந்த கவலையையும் அந்த அமைப்புகள் வெளிப்படுத்தியுள்ளன.

சர்வதேச மன்னிப்பு சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச சட்ட வல்லுநர்கள் ஆணையம், மனித உரிமைகள் மற்றும் மேம்பாட்டுக்கான ஆசிய மன்றம், அமைதி மற்றும் நீதிக்கான இலங்கை பிரசார அமைப்பு ஆகியன இணைந்து ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்படி விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மேலும், சர்வதேச மனித உரிமைகள், மனிதாபிமான சட்ட மீறல்கள், துஷ்பிரயோகங்களுக்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்ய அரசாங்கத்துக்கு பகிரங்க அழைப்பு விடுக்கவும் யாழ்ப்பாணத்தின் செம்மணியில் கண்டறியப்பட்ட மனித புதை குழியைப் பார்வையிடவும் இதுபோன்று, தெற்கில் ஜே. வி. பி. எழுச்சியுடன்

11

## முள்ளிவாய்க்கால் பேரவலத்துக்கு துணைபோனோருடன் தமிழ் அரசு கூட்டு!

### இப்படி சாடுகிறார் அமைச்சர் சந்திரசேகர்

கொழும்பு, ஜூன் 19

இசைப்பிரியாவின் மரணம் உட்பட முள்ளிவாய்க்கால் பேரவலத்துக்கு காரணமானவர்களுக்கு துணை நின்றவர்களுடன் தமிழ் அரசு கட்சி கூட்டுச்சேர்ந்து ஆட்சி அமைக்கிறது - இவ்வாறு தெரிவித்துள்ளார் கடற்றொழில், நீரியல்வளங்கள் அமைச்சர் இ. சந்திரசேகர்.

கொழும்பில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு,

"தோல்வியின் பிதாவாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ மாறியுள்ளார்.

11

## பாராளுமன்றம் ஒத்திவைப்பு!

கொழும்பு, ஜூன் 19

பாராளுமன்ற அமர்வுகள் இன்று வியாழக் கிழமை காலை 9.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

ஈரான் - இஸ்ரேல் மோதல் தாக்கத்தால் நாட்டுக்கு ஏற்படவுள்ள பாதிப்புகள் தொடர்பிலான ஒத்திவைப்பு வேளை விவாதம் நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவிருந்தது. இந்த நிலையிலேயே சபை ஒத்திவைக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா இந்த விவா தத்துக்கான ஒத்திவைப்பு தீர்மானத்தை சபையில் முன் வைத்திருந்தார். ஆனால், பிரேரணை விவாதிக்கப்பட்டபோது அவர் பாராளுமன்றத்தில் இல்லை.

11

### முன்னிலை வகிக்கும் சபைகளில்

## தமிழ் அரசின் ஆட்சி அமைவதற்கு ஏனையவர்கள் ஆதரிக்கவேண்டும்

### சுமந்திரன் தெரிவிப்பு

மன்னார், ஜூன் 19

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு கூடுதலான ஆசனங்கள் உள்ள சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு யாராக இருந்தாலும் ஆதரவு வழங்க வேண்டியது அவர்களின் தார்மீக கடமை என்று அந்தக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு கூறினார்.

மேலும், நடந்து முடிந்த

11

## காங்கேசன் களஞ்சியத்திலிருந்து எரிபொருள் விநியோகம் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூன் 19

காங்கேசன்துறை எரிபொருள் களஞ்சியத்திலிருந்து யாழ். மாவட்டத்துக்கான எரிபொருள் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை எரிபொருள் களஞ்சியசாலையின் திருத்தப் பணிகளை பெற்றோலிய கூட்டுத்தாபனம் கடந்த 8ஆம் திகதி நிறைவுறுத்தியது. இதைத் தொடர்ந்து புதிய எரிபொருள் களஞ்சியசாலையின்

11

## ஓடும் பஸ்ஸில் மாணவியிடம் அத்துமீறிய சிப்பாய் கைது!

மன்னார், ஜூன் 19

ஓடிக்கொண்டிருந்த பேருந்தில் பாடசாலை மாணவியிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட படைச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மடுவிலிருந்து முருங்கனுக்கு சென்று கொண்டிருந்த பாடசாலை மாணவியிடம் அத்துமீறிய சிப்பாயே நேற்றைய தினம் முருங்கன்

11

## வல்வெட்டித்துறை நகர சபை தமிழ் தேசிய பேரவை வசம்!

- சி.தில்லைநாதன் -

வடமராட்சி, ஜூன் 19

வல்வெட்டித்துறை நகர சபையின் தவிசாளராக அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் திருமதி தவமலர் சுரேந்திரநாதன் தெரிவாகியுள்ளார்.

வல்வெட்டித்துறை நகர சபையின் தவிசாளர், பிரதி தவிசாளரை செய்வதற்கான கூட்டம் நேற்று சபையின் சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

16 உறுப்பினர்களைக்கொண்ட

11

## வலி. வடக்கு பிரதேச சபை தமிழ் அரசு கட்சியின் வசம்!

யாழ்ப்பாணம், ஜூன் 19

வலி. வடக்கு பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தை இலங்கை தமிழ் அரசு கட்சி கைப்பற்றியது. தவிசாளராக அந்தக் கட்சியின் சோ. சுகிர்தன் தெரிவானார்.

வலி. வடக்கு (காங்கேசன்துறை) பிரதேச சபையின் தவிசாளர், உபதவிசாளர் தெரிவுக்கான அமர்வு வடக்கு உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் நேற்று நடந்தது.

தவிசாளர் பதவிக்கு இலங்கை தமிழ் அரசு கட்சி சார்பில் சுகிர்தன், அகில இலங்கை தமிழ்

11

## வலி. கிழக்கு பிரதேச சபை தமிழ் தேசிய பேரவை வசம்

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூன் 19

வலி. கிழக்கு பிரதேச சபையில் தமிழ்த் தேசிய பேரவை ஆட்சி அமைத்துள்ளது. சபையின் தவிசாளராக அந்தக் கூட்டணியின் தியாராஜா நிரோஷ் தெரிவானார்.

வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச சபையின் தவிசாளரை தெரிவு செய்வதற்கான கூட்டம் நேற்றைய தினம் நடைபெற்றது.

வடக்கு உள்ளூராட்சி ஆணையாளர் தேவநந்தினி பாபு தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில்

11

## கெஹலிய, மனைவி, மகள் மறியலில் வைக்கப்பட்டனர்

கொழும்பு, ஜூன் 19

கைது செய்யப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, அவரின் மனைவி, அவர்களின் மகள் ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் வாக்குமூலம் வழங்குவதற்காக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் முன்னிலையான கெஹலிய ரம்புக்வெல,

11

## தேசிய மக்கள் சக்தியால் முஸ்லிம் சமூகத்துக்கு அநீதி!

### ஐக்கிய மக்கள் சக்தி கவலை

கொழும்பு, ஜூன் 19

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முஸ்லிம் சமூகத்துக்கு மிகப்பெரும் அநீதி இழைத்துள்ளது. இந்த அமைச்சரவையில்தான் முஸ்லிம் பிரதிநிதிகள் எவருமில்லை. ஆனால், முஸ்லிம் மக்களின் வாக்குகளை முழுமையாக பெற்றுக்கொண்டது. கொழும்பு மாநகர சபையை சூழ்ச்சியால் இந்த அரசாங்கம்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெஹ்ரானில் இலங்கை தூதரகம் மூடப்பட்டது!

## அதிகாரிகள் அங்கிருந்து வெளியேற்றம்

கொழும்பு, ஜூன் 19

ஈரான் தலைநகர் தெஹ்ரானின் உக்கிர தாக்குதல் இடம்பெற்றுவருவதால் இலங்கை தூதரக அதிகாரிகள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அத்துடன், இஸ்ரேலில் நான்கு இலங்கையர்கள் காயமடைந்துள்ளனர் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இஸ்ரேல், ஈரான் போர் காரணமாக இஸ்ரேலில் உள்ள நான்கு இலங்கையர்கள் காயமடைந்துள்ளனர். மூன்று பெண்களும், ஆணொருவருமே இவ்வாறு காயமடைந்துள்ளனர். இவர்களில் மூவருக்கு சிறு காயங்களே ஏற்பட்டுள்ளன. ஒருவருக்கு மட்டுமே காலில் கண்ணாடி விழுந்து படுகாயம் ஏற்பட்டுள்ளது.

சிறு காயம் ஏற்பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. படுகாயம் அடைந்தவருக்கு வைத்தியசாலை ஊடாக சிகிச்சையளிப்பதற்கு தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இஸ்ரேலில் சுமார் 20 ஆயிரம் இலங்கையர்கள் பணியாற்றுகின்றனர். ஈரானில் 35 இலங்கையர்கள் மாத்திரமே உள்ளனர். அவர்களில் 8 பேர் இஸ்ரேல் பிரஜைகளை மணம் முடித்தவர்கள். மாணவர்களாக சிலர் உள்ளனர். சிலர் தொழில் செய்கின்றனர்.

தெஹ்ரானில் உள்ள இலங்கை தூதரகத்தை நேற்று அகற்றினோம். தெஹ்ரான்மீது தாக்குதல் தொடர்வதால் இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதிகாரிகள் மற்றும் தூதரகத்தில் தஞ்சமடைந்த 8 மாணவர்கள் ஈரான் வடக்கு பிரதேசம் நோக்கி அனுப்பட்டுள்ளனர். அங்கிருந்து தற்காலிக தூதரக சேவை இடம்பெறும்.

இஸ்ரேலுக்கு தொழில் நிமித்தம் இலங்கையர்கள் செல்வது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. விடுமுறையில் வந்துள்ளவர்களுக்கு விசா கால நீடிப்பை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

போர் நிலைமை மேலும் மோசமடைந்தால் இலங்கையர்களை மீட்பதற்காக அயல் நாடுகளுடனும் பேச்சு நடத்தப்பட்டுவருகின்றது-என்றார். (அ)

## ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து மற்றுமொருவர் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூன் 19

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பதவியில் இருந்து நாரஹேன்பிட்டகே சுசில் குமார கொஸ்தா கட்சியின் உறுப்புரிமையில் இருந்து உடன் அமுலாகும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவின் கையொப்பத்துடன் வெளியான அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் முகாமைத்து குழு மற்றும் கட்சியின் செயற்குழுவின் தீர்மானத்துக்கமைய, கொலன்னாவை நகர சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளர் நியமிக்கப்படவில்லை.

இதன் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## சட்டங்கள் மக்களின் ஜனநாயக உரிமைகளை காக்க வேண்டும்

கொழும்பு, ஜூன் 19

சட்டங்கள் மக்களின் ஜநாயக உரிமைகளை பாதுகாத்துக்கொடுக்கும் வகையில் அமைய வேண்டும் என மகளீர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெளிநாட்டு தீர்ப்புகளைப் பரஸ்பரம் ஏற்றங்கீகரித்தல், பதிவு செய்தல் மற்றும் வலுவுறுத்துதல் சட்டத்தின் கீழ் கட்டளைகள் தொடர்பில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். (அ)

## மாகாண சபைத் தேர்தல் இன்னும் தீர்மானமில்லை

கொழும்பு, ஜூன் 19

மாகாண சபைத் தேர்தலை எப்போது நடத்துவது என்பது குறித்து இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் 8 மாத காலப் பகுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் என்பன நடத்தப்பட்டுள்ளன.

தற்போது மக்கள் எமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கமைய செயற்பட வேண்டும். எதிர்வரும் நவம்பர் மாதத்தில் வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

இந்த அனைத்துக் காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டுதான் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான காலம் தீர்மானிக்கப்படும்.

அதற்கு முன்னர் இதனுடன் தொடர்புடைய சட்ட திருத்தங்களையும் மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது-என்றார். (அ)

## வவுனியா மாநகர முதல்வர் கடமையை பொறுப்பேற்றார்!

வவுனியா, ஜூன் 19

வவுனியா மாநகர முதல்வர் மற்றும் பிரதிமுதல்வர் ஆகியோர் நேற்று காலை கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றனர். வவுனியா மாநகரசபையின் முதல்வர், பிரதி முதல்வர் தெரிவு அண்மையில் இடம் பெற்றிருந்தது.

அந்தவகையில் முதல்வராக சுந்தரலிங்கம் காண்டீபனும், பிரதி முதல்வராக பரமேஸ்வரன் கார்த்தீபனும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் உத்தியோகபூர்வமாக நேற்று தமது கடமைகளை பொறுப்பேற்றனர்.



குறித்த நிகழ்வில் சமயத் தலைவர்கள் பொதுமக்கள், மாநகரசபை உத்தியோகத்தர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (அ)

## கலாசாலையில் தந்தையர் தினம்



யாழ்ப்பாணம், ஜூன் 19

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேற்று தந்தையர் தின நிகழ்வு சிறப்பாக இடம் பெற்றது.

கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் அதிதி பேச்சாளராக நல்லூர் பிரதேச சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் , கவிஞர் தர்மினி ரஜீபன் கலந்து கொண்டார்.

இரண்டாம் வருட ஆரம்ப கல்வி நெறி ஆசிரிய மாணவர்களின் ஒழுங்கமைப்பில் இடம் பெற்ற இந் நிகழ்வை ஏ.எம் பாத்திமா பர்சானா நெறிப்படுத்தினார் ர.தேவமணி 'அப்பா' எனும் தலைப்பில் உரை ஆற்றினார்.

அதிதிக்கான அறிமுக உரையை ஜே.சுலோசனா தேவி வழங்கினார்.

முதலாம் வருட ஆங்கில நெறி ஆசிரிய மாணவி கௌசிகாவினால் தந்தை பற்றிய சிறப்பு ஆவணப்படம் காட்சிப்படுத்தப்பட்டது.

அதிதிப்பேச்சாளராகக் கலந்துகொண்ட கவிஞர் தர்மினி ரஜீபன் கலாசாலை முகாமைத்துவ குழுவினரால் கௌரவிக்கப்பட்டார். (அ)

## முக்கிய அமைச்சுகளின் திட்ட முன்னேற்ற மதிப்பீடு வடக்கு ஆளுநரின் தலைமையில்!

யாழ்ப்பாணம், ஜூன் 19

நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சின் கீழ் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் மாதாந்த கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

இந்த ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளை நேரகாலத்துடன் செலவு செய்து மேலதிக நிதிகளைக் கோரவேண்டும். அதேநேரம் முன்னெடுக்கப்படும் திட்டங்களை திணைக்களத் தலைவர்கள் நேரில் சென்று பார்வையிடவேண்டும்.

அதேபோன்று எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்களைத் தயாரிக்கும்போதும் களத்துக்குச் சென்று பார்வையிட்டு மக்களுடன் கலந்துரையாடி அதனை முன்னெடுக்குமாறும் ஆளுநர் திணைக்களத் தலைவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

மேலும் புதிய கட்டுமானங்களை அலுவலகத் தேவைகளின் நிமிர்த்தம் அமைப்பதை விரும்பவில்லை. அவ்வாறான திட்டங்களை தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

தென்பகுதியிலிருந்து வடக்கு நோக்கி வரும் சுற்றுலாவிகள், வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான பிரதேசங்களில் தமது இயற்கை உபாதைகளைப் போக்குவதற்குரிய மலசலகூடங்கள் இல்லாமையைச் சுட்டிக்காட்டிய ஆளுநர் எதிர்காலத்தில் இது தொடர்பில் ஒவ்வொரு உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களும் கவனம் செலுத்தவேண்டும்.

இதன் பின்னர் உள்ளூராட்சி அமைச்சு, உள்ளூராட்சித் திணைக்களம், ஒவ்வொரு மாவட்டத்தினதும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் அலுவலகம், மாகாண காணித் திணைக்களம், மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், வீதி அபிவிருத்தித் திணைக்களம், சுற்றுலா அதிகார சபை, வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை என ஒவ்வொரு திணைக்களங்களினதும் ஒவ்வொரு திட்டங்களினதும் முன்னேற்றங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் தனுஜா முருகேசன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதன், பிரதிப் பிரதம செயலாளர் - நிதி, திட்டமிடல், பொறியியல், கட்டடங்கள் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் மாகாண பணிப்பாளர்கள் பங்கேற்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
19.06.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 06

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழ் கட்சிகள் ஒன்றுபட வேண்டிய முக்கியமான இடம்

மாகாண சபைகள் தேர்தலை நடத்தும் தீர்மானம் எட்டப்படவில்லை. ஏனெனில், அதற்கு முன்னர் பொருளாதார விடயங்களை முன்னெடுக்க வேண்டியிருக்கிறது. மிகவும் குறுகிய காலத்தில் மூன்று தேர்தல்களை நடத்தியிருக்கிறோம். மேலும், மாகாண சபைகள் தேர்தல் தொடர்பான சட்டத் திருத்தங்களையும் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இவ்வாறு அமைச்சரவை பேச்சாளர் நளிந்த திஸநாயக்க தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பில் 'ஈழநாடு' ஏற்கனவே எதிர்வு கூறியிருந்தது. அதாவது, உள்ளூராட்சித் தேர்தலில் பின்னடைவுகளை சந்தித்திருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதில் உடனடி ஆர்வத்தைக் காண்பிக்காது. எனவே, தேர்தலை முடிந்தவரையில் இழுத்தடிக்கவே வாய்ப்பு உண்டு என்பதை சுட்டிக்காட்டியிருந்தோம். நாம் சுட்டிக்காட்டியது போன்றே தற்போது அமைச்சரவை பேச்சாளர் கருத்து களை முன்வைத்திருக்கிறார்.

மாகாண சபைகள் தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயம் அரசாங்கத்துக்கு இல்லை. முன்னைய அரசாங்கங்கள் தேர்தலைத் தொடர்ந்தும் பிற்போட்டு வந்திருக்கிறது. இந்தக் காலத்தில் மாகாண சபை நிர்வாகத்தை முற்றிலும் ஆளுநர் ஆட்சியாகவே அவர்கள் முன்னெடுத்திருந்தனர். அதனை அப்படியே தொடர்வதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கும் பிரச்னையில்லை. இதேவேளை தென்னிலங்கையிலுள்ள சிங்கள கட்சிகளோ அல்லது சிவில் சமூக அமைப்புகளோ மாகாண சபைகள் தேர்தலை நடத்துமாறு அழுத்தங்களை பிரயோகிக்கப் போவதில்லை. ஏனெனில், அவர்களுக்கு மாகாண சபைகள் பிரத்தியேக ஈடுபாடுகள் இருப்பதற்கான நியாயமும் இல்லை.

இந்தப் பின்புலத்தில் மாகாண சபை தேவையான தமிழர் தரப்புகள் தான் மாகாண சபைகள் தேர்தலை நடத்துமாறு அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும். ஆனால், தமிழ் கட்சிகளோ இந்த விடயத்தில் போதிய கரிச னையை காண்பிப்பதற்கு பதிலாக உள்ளூராட்சி சபைகளில் மல்லுக் கட்டிக் கொண்டிருக்கின்றனர். இந்தளவு மல்லுக்கட்டி - திட்டங்களை தீட்டி - சபைகளை கைப்பற்றி அப்படி என்ன அதிசயங்களை புரிய முடியும்?

பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தில் என்ன இருக்கிறது - என்ன இல்லை என்னும் வாதங்கள் காலாவதியாகிப் போன வாதங்கள். பதின்மூன்றில், என்ன இருக்கிறதோ அவைகள் இருக்கின்றன - என்ன இல்லையோ அவைகள் இல்லை. இல்லாதவைகளை கொண்டுவருவதற்கு எந்தவொரு கட்சியாலும் அற்புதங்களையும் புரிய முடியாது. 2009இற்கு பின்னரான காலப்பகுதியில் அனைவரின் முகத்திரைகளும் கிழிந்து விட்டன. அரசியல் கட்சிகளின் தலைவர்கள் என்போர்கள் மட்டுமல்ல, கருத்துருவாக்கிகள், சிவில் சமூக அமைப்புகளின் தலைவர்கள் என்போர் அனைவருமோ தங்களுடைய கையறுநிலையை தாராளமாகவே பதிவு செய்துவிட்டனர்.

இந்தப் பின்புலத்தில் வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து கட்சிகளும் மாகாண சபைகள் தேர்தல் என்னும் ஒரு புள்ளியில் சந்தித்து, தேர்தலை நடத்துங்கள் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துங்கள் என்னும் சுலோகத்தின் கீழ் அரசாங்கத்தை நோக்கி கோரிக்கைகளை தொடர்ச்சியாக முன்வைக்க வேண்டும். தேர்தல் நடத்தும் வரையில் பேசிக் கொண்டும், இயங்கிக் கொண்டும் இருக்க வேண்டும். ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

தமிழ் கட்சிகள் ஒன்றுபட்டு இந்த விடயத்துக்காக இயங்கினால் மட்டும்தான், இந்த விடயத்தில் வெளித் தரப்புகள் திரும்பிப் பார்க்கும். தற்போதுள்ள சூழலில் வெளித்தரப்புகள் தமிழர் அரசியல்மீது பிரத்தியேக கவனத்தை காண்பிக்கும் சூழல் மருந்துக்கும் இல்லை.

## யாழ். போதனாவில் டெங்குக்கு 50 பேர் சிகிச்சை பெற்றனர்!

### மருத்துவர் யமுனானந்தா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ். போதனா மருத்துவமனையில் டெங்கு காய்ச்சலுக்கு 50 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று அந்த மருத்துவமனையின் பிரதி பணிப்பாளர் மருத்துவர் சி. யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வருடத்தில் இது வரையிலான காலப்பகுதியில் யாழ். போதனா மருத்துவமனையில் மாத்திரம் டெங்கு காய்ச்சலுக்காக 50 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.

டெங்கு நுளம்பு பரவலை கட்டுப்படுத்துவதன் ஊடாகவே டெங்கு காய்ச்சலில் இருந்து எம்மை பாதுகாத்து கொள்ள முடியும். எனவே நுளம்பு பரவும் இடங்களை அடையாளம் கண்டு அவற்றை அழிக்க வேண்டும் - என்றார். (ஐ)

## கொழும்பு மாநகர உறுப்பினர் மீதான தாக்குதலை கண்டிக்கின்றது பவ்ரல்!

கொழும்பு, ஜூன் 19

கொழும்பு மாநகர சபையின் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் உடுவடுகே சந்தமாலி மீது அடையாளம் தெரியாத குழுவினால் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதலை தேர்தல் கண்காணிப்பு அமைப்பான சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (பவ்ரல்) கண்டித்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை கொழும்பு மாநகர சபையின் உறுப்பினர், தனது அலுவலகம் அருகே காத்திருந்தபோது இந்த சம்பவம் நடந்ததாக பவ்ரல் ஒரு அறிக்கை வெளியிட்டது.

எந்தவொரு பகுதியிலும் தங்கள் அரசியல் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டதற்காக எந்தவொரு நபருக்கும் எதிராகச் செயல்பட யாருக்கும் உரிமை இல்லை என்றும், இது இலங்கை அரசியலமைப்பின் கீழ் உள்ள உரிமை என்றும் பவ்ரல் சுட்டிக்காட்டியது.

இது ஒரு துரதிர்ஷ்டவசமான சம்பவம் என்றும், இது ஆட்சியில் பெண்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் முயற்சிகளுக்கு எதிரானது என்றும் அந்த அமைப்பு குறிப்பிட்டது.

எனவே, சம்பவத்தில் தொடர்புடைய சந்தேக நபர்களை, அவர்களின் அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல், உடனடியாகக் கைது செய்து, சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பவ்ரல் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தது. (அ)

## அருண் ஹேமச்சந்திர சீனாவுக்குப் பயணம்!

கொழும்பு, ஜூன் 19

வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று சீனாவுக்கு பயணமானார்.

குறித்த விஜயத்தின் போது "பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் 9வது சீனா - தெற்காசிய கண்காட்சி மற்றும் 6ஆவது சீனா-தெற்காசிய ஒத்துழைப்பு மன்றத்தில்" இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்தி அருண் ஹேமசந்திர கலந்துகொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## "கொழும்பு மாநகர சபை மேயர் தெரிவில் முறைகேடு"

கொழும்பு, ஜூன் 19

மேல்மாகாண ஆணையாளர் நாயகத்தை சட்டத்தின் முன் கொண்டுவருவதற்கான நகர்வுகளை மேற்கொள்ளவுள்ளதாக எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொழும்பு மாநகர சபையின் மேயர் தேர்விற்காக இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் முறைகேடு இடம்பெற்றுள்ளது. பலவந்தமாகவே மேல் மாகாண ஆணையாளர் நாயகம் இரகசிய வாக்கெடுப்பை மேற்கொண்டார். இந்த விடயம் அரச அதிகாரிகள் மேல் இருக்கும் மரியாதையை அற்றுப்போக வைக்கும் வகையில் செயற்பட்டுள்ளார்.

நாட்டு மக்களின் ஜனநாயக உரிமையுடன் விளையாட வேண்டாம் . அரசியல்வாதிகளுக்கு துணை போனமையின் விளைவாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் செயலாளர் நாயகம்,மோட்டார்வாகன திணைக் கள அதிகாரிகள் சிறைக்கு சென்றுள்ளனர். அத்தகைய நிலைமையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம் என தெரிவித்துக் கொள்ள விரும்புகின் றோம். சட்டத்திற்கு புறம்பாக செயற்பட்டமைக்கு எதிராக நிச்சயம் நாம் மேல்மாகாண ஆணையாளர் நாயகத்தை சட்டத்தின் முன் கொண்டு வருவோம்.

முறைமை மாற்றத்தை மேற்கொள்வதாக கூறிக் கொண்டு ஆட்சிக்கு வந்து ஊல் அரசியலை மேற் கொண்டு மக்கள் வழங்கிய ஆணைக்கு அகௌரவத்தை ஏற்படுத்துகின்றனர் - என்றார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜுன் - 19 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆனி 05
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : நவமி




**மேடம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**இடபம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். கடமையுணர்வுடன் செயல்பட வேணடும்.

**மிதுனம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் சூட்சுமங்களைஉணருவீர்கள். மேலதிகாரிகளின் உதவி கிடைக்கும். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் அடுக்கடுக்கான வேலைகளால் அவதிக்கு உள்ளாவீர்கள். உத்தியோகத்தில் சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டி இருக்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
கடினமான வேலைகளையும் மாறுபட்ட அணுகுமுறையால் முடித்துக் காட்டுவீர்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக அமையும். உத்தியோகத்தில் தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**கன்னி**
பணப்புழக்கம் அதிகரிக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். அமோகமான நாள்.

**துலாம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். கனவு நனவாகும் நாள்.

**விருட்சிகம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் அமைதி நிலவும். உழைப்பால் உயரும் நாள்.

**தனுசு**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். அரசால் ஆதாயம் ஏற்படும். உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள். உத்தியோகத்தில் எல்லோரும் மதிப்பார்கள். புத்துணர்ச்சி பெருகும்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மனதில் இனம் புரியாத பயம் வந்துப் போகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். உத்தியோகத்தில் அதிகாரிகளை பகைத்து கொள்ள வேண்டாம்.

**மீனம்**
எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். எதிர்மறை எண்ணங்கள் வந்து செல்லும். வியாபாரத்தில் அவசர முடிவுகள் வேண்டாம். முன்னேறும் நாள்.

# நயினை அம்மன் ஆலய திருவிழா; முன்னாயத்த கூட்டம் நடைபெற்றது

யாழ்ப்பாணம், ஜூன் 19

வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய பெருந்திருவிழா தொடர்பான முன்னாயத்தக் கூட்டம் யாழ். மாவட்ட செயலகத்தில் பதில் அரச அதிபர் ம. பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய திருவிழா எதிர்வரும் 26ஆம் திகதி தொடக்கம் ஜூலை 11ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்த நிலையிலேயே இதற்கான முன்னாயத்தக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது பின்வரும் முக்கிய தீர்மானங்கள் எட்டப்பட்டன.

நயினாதீவு கடலில் மூழ்கிய பாதை போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது. இதைத் தவிர்க்க அதன் ஒரு பகுதியை கடற்படையின் ஒத்துழைப்புடன் அகற்றுதல்.

ஆலயத்துக்கு வரும் பக்தர்கள், அமுதசுரபி மண்டபம் மற்றும் மருத்துவ சிகிச்சை நிலையத்துக்கான தேவையான அளவு குடிதண்ணீரை சீராக தண்ணீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை வழங்குதல்.

பாதுகாப்புக்கு தேவையான பொலிஸ் உத்தியோகத்தர்களை கடமையில் ஈடுபடுத்தவும் முடிவு செய்யப்பட்டது. இதன்படி, சப்பை ரதத் திருவிழா வரை 50 பொலிஸாரும் அதன் பின்னர் பூங்காவனம் வரையான திருவிழாக்களுக்கு 100 பொலிஸாரும் கடமையில் ஈடுபடுவர்.

பக்த்தர்கள் அணிந்துவரும் நகைகளுக்கு அவர்களே பொறுப்பு என அறக்காவலர் சபையால் முன்கூட்டியே அறிவித்தல் வழங்குதல். ஆலயத்தின் அருகிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபை வீதியை செப்பனிடுதல்,

முதல் தடவையாக தீவகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சாரணர்களின் சேவைகள் பெற்றுக் கொள்ளுதல். அவர்களுக்கான போக்குவரத்து வசதியை வழங்குதல். திருவிழா காலத்தில் வழக்கம் போன்று யாழ். பேருந்து நிலையத்தில் இருந்து குறிகாட்டுவானுக்கு அதிகாலை 5.30 மணி முதல் போக்குவரத்து சேவையை நடத்துதல், சப்பை ரதம், தேர், தீர்த்தத் திருவிழா நாட்களில் அதிகாலை 4.30 மணி முதல் பேருந்து சேவைகள் நடைபெறும். குறிகாட்டுவானிலிருந்து ஆலயத்துக்கான படகு போக்குவரத்து சேவையின் ஒரு வழி கட்டணம் ரூ.80 ஆகும். படகு பயணிக்கும் நேரத்துக்கு அமைய இ. போ. ச. பேருந்து சேவையையும் நடத்துதல்.

இந்த நாட்களில் திருட்டில் ஈடுபடுவோர், யாசகம் பெறுவோர், சிறுவர்களை வியாபாரத்தில் ஈடுபடுத்துதல் போன்ற விடயங்களை கையாளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிகாட்டுவான் துறைமுகத்தின் உள்நுழைவு வரை வாகனங்கள் தரித்து நிற்பதனை தடுத்தல். ஆலயத்துக்கு முன்பாகவுள்ள கடைகளை அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் வேறு பொருத்தமான இடத்துக்கு மாற்றுதல்.

எதிர்வரும் 24ஆம் திகதி முதல் ஜூலை 12 ஆம் திகதி வரை கல், மண் எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன், மதுபான விற்பனை தடை, பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்தல், அன்னதான ஒழுங்கு, சுகாதார சேவைகளை வழங்குதல் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டன.

(ஐ)

# வடக்கு அரச உத்தியோகத்தர்களுக்கு செயற்கை நுண்ணறிவு பயிற்சிகள்!

யாழ்ப்பாணம், ஜூன் 19

வடக்கில் உள்ள அரச உத்தியோகத்தர்கள் செயற்கை நுண்ணறிவு (ஏ. ஐ.) தொழில்நுட்பத்தை கற்றுக்கொள்ள கூடியவாறான பயிற்சிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று வட மாகாண பிரதி பிரதம செயலாளர் செ. பிரணவநாதன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகின் ஏற்பாட்டில் இரண்டு கற்கை நெறிகளை பூர்த்தி செய்த அலுவலர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாண பிரதம செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இங்கு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

(ஐ)

# கூட்டுறவை மேம்படுத்துவதற்கு புத்தாக்க சிந்தனை அவசியம்!

## வடக்கு ஆளுநர் வேதநாயகன்

யாழ்ப்பாணம், ஜூன் 19

கூட்டுறவுத்துறையை மேம்படுத்துவதற்காக தனியாருடன் போட்டியிடக்கூடியவாறு புத்தாக்க சிந்தனைகளை நோக்கி செயல்பட வேண்டும் என்று வடக்கு கூட்டுறவு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார் ஆளுநர் நா. வேதநாயகன்.

வர்த்தக வாணிப அமைச்சின் கீழ் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதிக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் மாதாந்த கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஆண்டு இறுதி வரையில் காத்துக்கொண்டிருக்காது நேரகாலத்துடன் திட்டங்களை செயற்படுத்தி முடிக்கவேண்டும். எந்தவொரு காரணத்துக்காகவும் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி செலவு செய்து முடிக்காமல் இருக்க முடியாது - என்றும் கூறினார்.

இந்தக் கூட்டத்தல் துறை சார் திணைக்களத் தலைவர்கள், பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

(ஐ)

# கிணற்றில் தவறி விழுந்து 6 வயது சிறுமி உயிரிழப்பு

கிணறு மூடப்பட்டிருந்த வலை மீதேறி விளையாடிய சிறுமி கிணற்றுக்குள் விழுந்து உயிரிழந்தார்.

சாவகச்சேரி நகரப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் ஆட்கள் எவரும் இல்லாத சமயம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிறுமியின் சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டு, பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# யாழில் கடும் காற்று; 4 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ்ப்பாணத்தில் கடும் காற்றால் 12 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி. என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த இருவர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்தது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் ஒருவர் பாதிக்கப்பட்டார். அவர் வசித்த வீடும் பகுதியளவில் சேதமடைந்தது.

வேலணை பிரதேச செயலர் பிரிவில் ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வர் பாதிக்கப்பட்டனர். அத்துடன், வீடும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவர் பாதிக்கப்பட்டனர். வீடும் பகுதியளவில் சேதமடைந்தது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியேற முடியாது இஸ்ரேலில் சிக்கி தவிக்கும் இலங்கையர்கள்!

## விமான சேவைகள் இல்லாமையால்

**கொழும்பு, ஜூன் 19**

**வணிக நோக்கங்களுக்காக இஸ்ரேலில் உள்ள பல இலங்கையர்கள் வெளிச்செல்லும் விமானங்கள் இல்லாததால் சிக்கித் தவிப்பதாக இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.**

தற்போது, ஈரானுடனான மோதல் காரணமாக இஸ்ரேலின் முக்கிய சர்வதேச விமான நிலையமான பென் குரியன் சர்வதேச விமான நிலையம் மற்றும் இஸ்ரேலிய வான்வெளி அனைத்து சர்வதேச விமானங்களுக்கும் மூடப்பட்டுள்ளன.

இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தூதரக அதிகாரிகள் அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருவதாகவும், தேவைப்பட்டால் இஸ்ரேலை விட்டு வெளியேறுவதற்கான ஆதரவையும் வழங்குவதாகவும் இஸ்ரேலுக்கான இலங்கை தூதர் நிமல் பண்டார குறிப்பிட்டார்.

தற்போதைய பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக, இஸ்ரேலை விட்டு வெளியேறுபவர்கள் ஈலாட் எல்லை வழியாக எகிப்துக்குச் செல்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பழைய கட்டிடங்களில் முறையான தங்குமிடங்கள் இல்லாமல் வசிக்கும் சில இலங்கையர்கள் தங்கள் பாதுகாப்பு குறித்து கவலை தெரிவித்துள்ளதாக தூதர் நிமல் பண்டார தெரிவித்தார்.

அதன்படி, தாக்குதல்களின் போது தங்குமிடத்திற்கான தற்காலிக மாற்று வழிகளை அடையாளம் காணவும், தனிப்பட்ட அவசரகால திட்டத்தை உருவாக்கவும், தங்கள் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நியமிக்கப்பட்ட சமூக சேவையாளர்களை அணுகுமாறு அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் உள்ள அனைத்து இலங்கையர்களும் விழிப்புடன் இருக்கவும், அதிகாரப்பூர்வ அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும், அவசர நிலைகள் ஏற்பட்டால் தூதரகத்தைத் தொடர்பு கொள்ளவும் தூதர் நிமல் பண்டார அறிவுறுத்தியுள்ளார். (அ)

# கொழும்பு மாநகர முதல்வர் கடமையை பொறுப்பேற்றார்



கொழும்பு, ஜூன் 19

கொழும்பு மாநகர சபையின் முதல்வராக தெரிவு செய்யப்பட்ட விராய் கெலீ பல்தசார் நேற்று கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

மாநகர முதல்வர் அலுவலகத்தில் வைத்து அவர் கடமை களை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில், அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, பிரதியமைச்சர் சுனில் வட்டகல, மேல் மாகாண ஆளுநர், கொழும்பு மாநகர சபை உறுப் பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கொழும்பு மாநகர சபையின் முதல்வருக்கான வாக்கெடுப்பு அண்மையில் இடம்பெற்றது. இதன்போது, 61 வாக்குகளை பெற்று முதல்வராக தெரிவானார். (அ)

# காரின் மீது விழுந்தது மரம்!



ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில், ஹட்டன் குயில் வத்த பகுதியில் நேற்று முந்தின இரவு, கம்பஹா விலிருந்து தலவாக் கலை நோக்கிச் சென்ற காரின் மீது பரிய மரம் ஒன்று விழுந்து விபத்து சம்பவித் துள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக குறித்த மரம், சரிந்து வீதியில் சென்றுக் கொண்டிருந்த கார் மீது விழுந்துள்ளது.

இதன்போது சாரதி மட்டுமே காரில் இருந்ததாகவும், அவருக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்பட வில்லை என தெரிவித்துள்ள பொலிஸார்,காரின் பின்புறம் பலத்த சேதமடைந்துள்ளதாக தெரிவித்தனர்.

காரின் மீது மரம் விழுந்த தால், குறித்த வீதியில் சுமார் 30 நிமிடங்கள் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. வட்டவளை பொலிஸார் மற்றும் பிரதேச வாசிகள் மரத்தை வெட்டி அகற்றிய பின்னர், வீதியின் போக்குவரத்து இயல்பு நிலைக் குத் திரும்பியுள்ளது. (அ)

# பூஸா சிறைச்சாலையில் 5 கைதிகள் போராட்டம்

கொழும்பு, ஜூன் 19

பூஸா சிறைச்சாலையின் ஐந்து கைதிகள் கூரை மீது ஏறி போராட்டத்தில் ஈடுபட்டதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் குறித்த சிறைச்சாலையில் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# குளவிகள் கொட்டியதால் 8 பேர் மருத்துவமனையில்

கொழும்பு, ஜூன் 19

தோட்டத் தொழிற்துறையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களை குளவிகள் கொட்டியதினால் 08 பேர் பொகவந்தலாவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பொகவந்தலாவ கெக்கஸ்ஸ்வோல்ட் தோட்டத்தில் தேயிலைத் தளிர்கள் கொய்யும் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களே, குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். இச்சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருப்பவர் களில் 7 பேர் சிகிச்சைகளின் பின் வீடு திரும்பியுள்ளதாகவும், 8 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# நிதி அமைச்சின் செயலர் சிறிவர்தனவுக்கு பாராட்டு!



கொழும்பு, ஜூன் 19

நல்ல விடயங்களை உருவாக்குவதற்குப் பங்களிப்பதுடன், கெட்டதைத் தடுப்பதற்கு போராடுவதும் அரச அதிகாரிகளின் பொறுப்பாகும் என்றும், அந்தவகையில் நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன நாட்டிற்கு ஒரு சிறந்த முன்மாதிரியாகத் திகழ்ந்துள்ளார் என் றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அதேபோன்று, கடந்த பொருளாதார நெருக்கடியின் பின்னர் ஏற்பட்ட மாற்றத்தின் போது நாட்டின் பொருளாதாரத்தை சிறப்பாக நிர்வகிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதார வெற்றிக்கு அவர் ஆற்றிய குறிப்பிடத்தக்க பங்களிப்பு மற்றும் அர்ப்பணிப்பை பாராட்டிய ஜனாதிபதி, அதற்காக தனது நன்றியைத் தெரிவித்தார்.

நிதியமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன ஓய்வுபெறுவதை முன்னிட்டு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மனிதர்களின் உண்மையான மதிப்புகளுக்குப் பதிலாக ஏனைய விடயங்கள் மதிப்புமிக் கவைகளாக மாறிவிட்ட இந்தக் காலகட்டத்தில், நாட்டையும் சமூகத்தையும் முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு தனிம னித மதிப்புகள் கொண்ட புதிய மதிப்பு முறையின் அவசியத்தை இங்கு சுட்டிக்காட்டிய ஜனா திபதி, அதிகப்படியான நுகர்வு மற்றும் ஊழலால் பாதிக்கப்பட்ட அரச சேவைக்குப் பதிலாக, மனிதாபிமானத்துடனும், மற்றவர்களிடம் உணர் திறன் உடையவராகவும் தனது பொறுப்புகளை நிறைவேற்றும் அரச சேவையே நாட்டிற்கு அவ சியம் என்றும் தெரிவித்தார்.

அத்துடன், அரச சேவை, பிரஜைகளுக்கு மேலால் உள்ள மற்றும் மக்களுடன் தொடர்பில்லாத ஒரு பொறிமுறையாக இருக்கக் கூடாது என்பதுடன், தீர்மானங்களை எடுக்கும்போது, அத்தீர்மானங்கள் மக்களின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து எப்போதும் கவனம் செலுத்தப்பட வேண்டுமென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதிக அனுபவமும் ஆழமான புரிதலும் கொண்ட சிரேஷ்ட அரச அதிகாரியான மஹிந்த சிறிவர்தனவின் தொழில் வாழ்க்கையிலிருந்து இளம் அரச அதிகாரிகள் பல முன்மாதிரிகளைக் கற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இங்கு உரையாற்றிய மஹிந்த சிறிவர்தன, நிதியமைச்சின் செயலாளராக தனது 03 வருட சேவையானது தனது தொழில் வாழ்க்கையில் மிகவும் தனித்துவமான தருணம் என குறிப்பிட்டார்.

நாட்டின் ஆட்சியில் மாற்றம் ஏற்பட்ட போதிலும் தம் மீது நம்பிக்கை வைத்து, தொடர்ந்தும் அந்தப் பதவியில் சேவையாற்ற தனக்கு சந்தர்ப்பம் வழங்கியமைக்காக ஜனாதி பதிக்கு நன்றி தெரிவித்த அவர், தனது பதவியில் கடமையாற்றும் போது ஜனாதிபதியிட மிருந்து கிடைத்த ஆதரவு தனக் குப் பெரும் பலமாக அமைந்தது என்றும் தெரிவித்தார்.

அதேபோல், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் நம்பிக்கை, சகிப்புத்தன்மை மற்றும் எல்லையற்ற அர்ப்ப ணிப்பு இன்றி, நாட்டை பொருளாதார நெருக்கடியி லிருந்து மீட்டிருக்க முடியாது என்றும் மகிந்த சிறிவர்தன மேலும் குறிப்பிட்டார்.

நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவின் சிறந்த சேவையைப் பாராட்டி ஜனாதிபதி அவருக்கு நினைவுப் பரிசு ஒன்றையும் வழங்கினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல வைத்தியசாலைகளிலும் சுவசரிய அம்புலன்ஸ் இல்லை!

## உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என எதிர்க்கட்சியினர் சபையில் கேள்வி

கொழும்பு, ஜூன் 19

**நாட்டில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் சுவசரிய நோயாளர் காவு வண்டிகள் இல்லை. இந்த பிரச்னைக்கான தீர்வை வழங்க பெற்றுத்தர முடியுமா என எதிர்க் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன சபையில் கேள்வி எழுப்பியுள்ளார்.**

பாராளுமன்றம் சபாநாயகர் ஜனத் விக்ரமரத்ன தலைமையில் நேற்று கூடியது. இதன் போது வாய்மூல வினாவுக்கான கேள்வி நேரத்திலேயேஅவர் இந்த கேள்வியை எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அனைத்து வைத்தியசாலைகளிலும் நோயாளர் காவு வண்டிகள் அற்ற நிலையே காணப்படுகின்றது. சில வைத்திய சாலைகளில் நோயாளர் காவு வண்டிகள் இல்லை. உதாரணமான லக்கல பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள இலுகும்புர வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டி இருப்பினும், வேறு வைத்தியசாலைகளுக்கு அந்த நோயாளர் காவு வண்டி கொண்டு செல்லப்படுகின்றது. ஆகவே அனைத்து பொலிஸ் பிரிவுகளிலும் உள்ள வைத்தியசாலைகளுக்கு சுவசரிய நோயாளர் காவு வண்டிகள் இருத்தல் அவசியமான விடயமாக அமைந்துள்ளது. அதேபோன்று சில தோட்ட வைத்திய சாலைகளிலும் நோயாளர் காவு வண்டிகள் அற்ற நிலை காணப்படுகின்றது. இந்த பிரச்சினைக்கான தீர்வை வழங்க முன்னெடுக்கப்படும் நடவடிக்கை என்ன?-என்றார்.

அதற்கு பதிலளித்த சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ,

இந்த பிரச்னை அலுக்கும்புர வைத்திய சாலையில் மாத்திரம் அல்ல. மேலும் சில சில இடங்களிலும் காணப்படுகின்றது. 650 நோயாளர் காவு வண்டிகளை மேலதிகமாக பெற நடவடிக்கை எடுக்கவுள்ளோம். அதேபோன்று நோயாளர் காவு வண்டிகளுக்கான சாரதிகள் தொழிநுட்ப ரீதியான கோளாறுகள் என்பவற்றை சீர் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

சுகாதார சேவையை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டத்தின் ஊடாக நோயாளர் காவு வண்டி சேவையையும் விஸ்தரிக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த பிரச்சினை எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் எதிர்கொள்ளும் பிரச்னையாக இந்த பிரச்னை அமைந்துள்ளது-என்றார். (அ)

# இஸ்ரேல்-ஈரான் யுத்தத்தினால் நமது நாட்டுக்கு பெரும் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 19

இஸ்ரேல்-ஈரான் யுத்தத்தினால் நமது நாட்டுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து அவசர விவாதத்தை நடத்துமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நிலையியற் கட்டளை 19(1) இன் கீழ் காணப்படும் ஏற்பாடுகளுக்கு அமைய, இஸ்ரேல்-ஈரான் யுத்தத்தினால் நாட்டுக்கு ஏற்படும் தாக்கம் குறித்து விவாதமொன்றை நடத்தக் கோரி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் கொண்டு வந்த பிரேரணையினை முன்வைத்து கருத்துரைக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இந்த பிரேரணைக்கு 20 இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது இணக்கத்தை தெரிவித்தனர்.

இஸ்ரேல்-ஈரான் யுத்தம் காரணமாக கடும் நெருக்கடி நிலைசார் பிரச்னை எழுந்துள்ளது. நமது நாட்டைச் சேர்ந்த 10,000 முதல் 20,000 பேர் அளவிலானோர் இஸ்ரேலில் வேலை செய்து வருகின்றனர். இவர்களின் உயிர் பாதுகாப்பு விடயத்திலும் பிரச்னை எழுந்துள்ளது. இலங்கையின் ஏற்றுமதி வருமானத்துக்கு முக்கிய பங்களிப்பை வழங்கும் தேயிலை ஏற்றுமதியில் ஈரான் முக்கிய இடத்தை வகின்றது.

இந்த யுத்த சூழ்நிலைக்கு மத்தியில் தேயிலைத் தொழில் மற்றும் ஏற்றுமதிகள் முகம் கொடுக்க நேரிடும் கடுமையான பாதுப்புகள் குறித்து பேசி கலந்துரையாடவேண்டும். இந்த யுத்தம் எரிபொருள் விலைகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

இது பொருளாதார வளர்ச்சி, உற்பத்தி திறன், தொழில்துறைக் கட்டமைப்பு மற்றும் ஒட்டுமொத்த மக்களுக்கும் பெரும் பின்னடைவை ஏற்படுத்தக்கூடும் என்பதால், முறையான விவாதத்திற்கு நாம் பிரவேசிக்க வேண்டும்.

வரையறுக்கப்பட்ட அணு ஆயுத யுத்தமொன்றின் பாதிப்பையும் சந்திக்க வேண்டிவருமான சூழலும் உருவாகி வருகிறது. இதனால் பிராந்திய பாதுகாப்பு தொடர்பான பிர-ச்னை-என்றார். (அ)

# ஓய்வூதிய சட்டங்களை இரத்துச் செய்ய அனுமதி

1986 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க ஜனாதிபதி உரித்துக்கள் சட்டம் மற்றும் 1977 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்ற ஓய்வூதியச் சட்டங்களை இரத்துச் செய்வதற்கு அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சமகால அரசாங்கத்தால் பொது மக்களுக்கு முன்வைத்துள்ள "வளமான நாடு அழகான வாழ்வு" கொள்கைப் பிரகடனத்தின் பிரகாரம், முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டுள்ள விசேட சிறப் புரிமைளை இரத்துச் செய்வதற்காகவும், ஐந்து வருடங்களுக்குப் பின்னர் வழங்கப்படும் ஓய்வூதி யத்தை இரத்துச் செய்வதற்கும் மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்.

இவற்றை இரத்துச்செய்யும் வகையில் 1986 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க ஜனாதிபதியின் உரித்துக்கள் சட்டம் மற்றும் 1977 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நாடராளுமன்ற ஓய்வூதியச் சட்டங்களை இரத்துச் செய்வதற்காக 02 சட்டமூலங்களைத் தயாரிப்பதற்கு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது-என்றார். (அ)

# நுவரெலியா பிரதேச சபை இ.தொ.கவின் வசமானது

கொழும்பு, ஜூன் 19

நுவரெலியா மாவட்டம் நுவரெலியாபிரதேசசபையை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது. நுவரெலியா பிரதேச சபை யின் தவிசாளராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர் வேலு யோகராஜ் தெரிவானார்.

பிரதி தவிசாளராக தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஹேவகே ஆசா தில்ருக்சி பொன்சேகா தெரிவாகியுள்ளனர். வாக்கெடுப்பின்றி சபை தவிசாளராக வேலு யோகராஜ் ஏகமனதாக தெரிவு செய்யப் பட்டார்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு, சுற்றுலாத்துறை டிஜிற்றல் மயப்படுத்தலை விரிவாக்க ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 19

அரச துறையில் சேவைகளை வழங்கும் செயல்முறையை டிஜிற்றல் மயமாக்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் ஒரு படியாக, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சினால் செயல்படுத்தப்படும் டிஜிற்றல் மறுசீரமைப்பு தொடர்பான வேலைத்திட்டம் குறித்த கலந்துரையாடல் நேற்று முன் தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

அந்த அமைச்சின் உள்ளக சேவைகள் மற்றும் இராஜதந்திர சேவைகளை வழங்கும் செயல் முறையை டிஜிற்றல் மயமாக்குவதற்கான பணிகளை விரைவுபடுத்தும் நோக்கத்துடன் டிஜிற்றல் பொருளாதார அமைச்சின் ஒத்துழைப்புடன் இந்த கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வெளிநாட்டுத் தூதுக்குழு சேவைகளை டிஜிற்றல் முறையில் நிர்வகித்தல், விரிவாக்கப்பட்ட டிஜிற்றல் தூதரக சேவைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் வெளிநாட்டுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்கான முறையான பொறிமுறையை நிறுவுதல் உள்ளிட்ட பல முக்கிய துறைகள் குறித்து இங்கு அதிக கவனம் செலுத்தப்பட்டது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயனாளிகளுக்கு தகவல் மற்றும் சேவைகளுக்கான சிறந்த பிரவேசத்தை உறுதிசெய்து, பயனாளிகள் - நட்பு இணைய இடைவழிமுறையை அறிமுகப்படுத்துவதற்கான திட்டங்களும் இதன் போது வலிறுத்தப்பட்டன. வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கான கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் மற்றும் ஏனைய உத்தியோகபூர்வ ஆவணங்களை சமர்ப்பித்தல் போன்ற நடைமுறைகளை இலகுபடுத்தும் செயற்பாட்டு நடைமுறைகளை எளிமைப்படுத்துவது குறித்தும் இங்கு பரிசீலிக்கப்பட்டது.

இந்த மறுசீரமைப்பு கள் நிர்வாகத் தாமதங்களைக் குறைத்து, பயனாளிகளின் வசதியை குறிப்பிடத்தக்க அளவில் மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன மற்றும் வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர ஆகியோரின் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில்,டிஜிற்றல் பொருளாதார அமைச்சின் செயலாளர் வருண தனபால, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே, வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சின் மேலதிக செயலாளர் பிரசாத் பியசேன, தூதரக விவகாரங்கள் பிரிவின் பணிப்பாளர் நாயகம் நிர்மல பரணவிதான, மக்கள் இராஜதந்திரப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் துஷார ரொட்ரிகோ மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பதில் மேலதிக பொது முகாமையாளர் (சர்வதேச விவகாரங்கள்) பீ.ஜீ. ஜீ.எஸ். யாப்பா உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் பங்கேற்றனர். (அ)

# மற்றவர்களது சிரமங்களைச் சரியாக புரிந்து கொள்பவரே சிறந்த குடிமகன்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, ஜூன் 19

ஒரு வெற்றிகரமான குடிமகன் என்பது நல்ல தொழிலை செய்வது மட்டுமல்ல, மாறாக மற்றவர்களின் சிரமங்கள் மற்றும் பெண்களின் பிரச்னைகளை உணருவதாகும் என கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

இளைஞர்களின் சுகாதாரம் குறித்து பாடசாலை மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்காக நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துக் கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சுகாதாரம் என்பது கல்வியுடன் நேரடியாக தொடர்புடையது என்று நாங்கள் நம்புகிறோம்.

கல்விக்கும் சுகாதாரத்திற்கும் என்ன தொடர்பு என்று சிலர் யோசிக்கலாம். சுகாதாரம் என்பது அனைவரின் உரிமை,

அனைவருக்கும் தேவையான ஒன்று மற்றும் பாடசாலைகளில் சரியான சுகாதார வசதிகள் இல்லாததால், குறிப்பாக வசதிகள் குறைவாக உள்ள பாடசாலைகளில் உள்ள பெண்கள், மாதத்திற்கு ஒரு முறையாவது கல்வியைத் தவறவிடுகிறார்கள் என்பதை தரவுகள் காட்டுகின்றன. அதே நேரத்தில், சமூகத்தில் சுதந்திரமாக நடமாடும் அவர்களின் உரிமை குறைவாகவே உள்ளது.

சரியான சுகாதார வசதிகள் இல்லாததால். மாணவர்களாகிய நீங்கள் மட்டுமல்ல, நாம் அனைவரும் இந்த அனுபவத்தை அனுபவித்திருக்கிறோம்.பாடசாலையில் மட்டுமல்ல.

பொது வசதிகள் இல்லாததால், பெண் கள் பொதுவாக சமூகத்தில் இந்த சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.சுகாதாரம் மிகவும் முக்கி யமானது.

ஆண்கள் இங்கு என்ன தெரிந்து கொள்ள வேண் டும் என்று நீங்கள் கேட்கலாம்.

இது பெண்களின் பிரச்னை, அவர்கள் அதைத் தீர்க்கும் போது அது முடிந்துவிடும். ஆனால் உங்களுக்கும் சுகாதாரப் பிரச்சனைகள் உள்ளன.

அத்துடன் பெண்கள் ஏதேனும் சிரமத்தை எதிர்கொண்டால், ஆண்கள் அதைப் பற்றி உணர்திறன் மிக்கவர்களாக இருக்க புரிதலும் இரக்கமும் கொண்டிருக்க வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு மேயர் தெரிவு சட்ட விரோதமானதல்ல!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, ஜூன் 19

**சுயாதீன உறுப்பினர்களானாலும், ஏனைய கட்சி உறுப்பினர்களானாலும் உள்ளூராட்சி மன்றங்களை முறையாக நிர்வகித்துச் செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்கினால், அதனை எம்மால் தவிர்க்க முடியாது.கட்சிக்குள் ஒற்றுமையை பாதுகாக்க முடியாத சஜித் பிரேமதாசவின் மிரட்டல்களுக்கு தாம் அஞ்சப் போவதில்லை என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொது மக்கள் அனைவரும் இரகசிய மாகவே தமது வாக்குகளைப் பதிவு செய்தனர்.

இவ்வாறு இரகசிய வாக்கு பதிவின் போது பிரஜைகள் யாரிடமாவது இலஞ்சம் பெற்றிருக்கின்றனரா? இல்லையல்லவா?.

சுயாதீனமான ஜனநாயகமான தேர்தலில் இரகசிய வாக்களிப்பும் ஒரு பகுதியாகும்.இரகசிய வாக்களிப்பா இல்லையா என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் உள்ளூராட்சி ஆணையாளருக்குரியதாகும்.

கொழும்பு மாநகர மேயர் தெரிவு எந்த வகையிலும் சட்ட விரோதமான தல்ல.

இறுதி நேரத்திலேயே ஐக்கிய மக்கள் சக்தியினர் இரகசிய வாக்கெடுப்பு வேண்டாமெனக் கூறினர்.

தேர்தலுக்கு முன்னர் இவர்கள் எதிர்க் கட்சிகள் இணைந்து கூட்டணியமைப்பதாகக் கூறவில்லை.

அவ்வாறிருக்கையில் தற்போது ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியமைப்பது மக்கள் ஆணையை மீறும் செயல் அல்லவா?



தம்புள்ளையில் கட்சியின் தீர்மானத்துக்கு முரணாக 6 உறுப்பினர்கள் செயற்பட்டிருக்கின்றனர்.

கட்சியை ஒற்றுமையாக பேண முடியாத சஜித் பிரேமதாசவின் அலட்டல்களுக்கு நாம் அஞ்சப் போவதில்லை.

சுயாதீன உறுப்பினர்களானாலும், ஏனைய கட்சி உறுப்பினர்களானாலும் உள்ளூராட்சி மன்றங்களை முறையாக நிர்வகித்துச் செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்கினால், அதனை எம்மால் தவிர்க்க முடியாது-என்றார். (அ)

# அநுர குமாரவின் சதியாலேயே கொழும்பு மாநகரை இழந்தோம்!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 19

"தேசிய மக்கள் சக்தியின் தலைவரான ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் சதியாலேயே கொழும்பு மாநகர சபையை ஐக்கிய மக்கள் சக்தி இழந்தது" என்று, எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக எம். பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், "கொழும்பு மாநகர சபையை ஐக்கிய மக்கள் சக்தியே கைப்பற்றியிருக்கவேண்டும். 60இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் முதல்வர் வேட்பாளர் ரிஸா சரூக்குக்கு ஆதரவு வழங்குவோம் என்று எழுத்து மூலம் உத்தரவாதம் தந்திருந்தனர்.

ஆனால், ஜேர்மனியிலிருந்து ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நாடு திரும்பிய கையுடன் கொழும்பு மாநகர சபைக்குள் தலையிட்டு ஏற்படுத்திய சதியால் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் வெற்றி வாய்ப்பை இழந்தார்.



ஜனாதிபதியின் தலையீட்டால்தான் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருந்தால் ஐக்கிய மக்கள் சக்தியே கொழும்பு மாநகர சபையை கைப்பற்றியிருக்கும். இது எமக்குத் தோல்வி அல்ல. சதியால் 7 வாக்குகளால் வெற்றி வாய்ப்பை இழந்தோம்.

ஜனாதிபதியின் சதியால் கொழும்பு மாநகர சபையின் முதல்வராக வந்துள்ள தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் விராய் கெலீ பல்தசாருக்கு வாழ்த்துக்கள்." - என்றார். (ஐ)

# பெருந்தோட்ட அமைச்சருடன் இந்தோனேசிய தூதுவர் பேச்சு

கொழும்பு, ஜூன் 19

இலங்கைக்கான இந்தோனேசிய தூதுவர் டெவி குஸ்டினா டோபிங்கிற்கும் பெருந்தோட்ட அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சருக்கிடையில் பத்தரமுல்லையில் அமைந்துள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது இலங்கையின் பெருந்தோட்ட விவசாய மற்றும் தெங்கு உற்பத்திகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையின் பெருந்தோட்ட விவசாயத்துறையில் காணப்படுகின்ற வளர்ச்சி விசேடமாக தெங்கு, நெல், சோளம் உற்பத்திகளில் இரு நாடுகளுக்கு இடையிலான அனுபவங்கள் மற்றும் ஒத்துழைப்புக்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது.

இந்த சந்திப்பில் பெருந்தோட்ட அமைச்சின் செயலாளர், அமைச்சின் இணைப்புச் செயலாளர் சிவனேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# மூத்த பிரஜைகளுக்கு விசேட நிலையான வைப்பு திட்டம்!

கொழும்பு, ஜூன் 19

வரவு - செலவு திட்டத்தில் முன்மொழியப்பட்டமைக்கு அமைய மூத்த குடிமக்களுக்கு விசேட நிலையான வைப்பு உத்தேச திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கமைய மூத்த குடிமக்களுக்கு விசேட நிலையான வைப்புத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி, 60 வயது அல்லது அதற்கு மேற்பட்ட இலங்கை குடிமக்கள் 2025.07.01 தொடக்கம் 2025.12.31 வரையான காலப்பகுதியில் திறக்கப்படுகின்ற நிலையான வைப்புகளுக்கு குறித்த உத்தேசத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

நிலையான வைப்பு காலம் 12 மாதங்களாகவும் உயர்ந்தபட்ச வைப்பு பெறுமதி 10 இலட்சம் ரூபாயாகவும் இருக்கும். இதற்கமைவாக சராசரி நிலையான வைப்பு வட்டி வீதத்துக்கு மேலதிகமாக வருடாந்த வட்டி வீதம் 3 சதவீதத்தை சேர்த்து கிடைக்கின்ற பெறுமதி அல்லது குறித்த வங்கியால் வெளியிடப்படும் நிலையான வைப்பு வட்டி வீதத்துடன் 3 சதவீதத்தை சேர்த்துக் கிடைக்கின்ற பெறுமதி அல்லது இரண்டில் அதிகமுள்ள வட்டி வீதத்தை செலுத்துதல் அமையும். இதற்காக வரவு - செலவு திட்டத்தில் 3 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டமை தெரிந்ததே. (ஐ)

# இலங்கைப் பெண் எம்.பிக்கள் இந்திய தூதுவரினால் வரவேற்பு

கொழும்பு, ஜூன் 19

இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா தலைமையில், இலங்கைப் பாராளுமன்ற பெண் உறுப்பினர்கள் ஒன்றியத்தினருக்கான வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது.


கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது இந்தியா மற்றும் இலங்கை அரசியலில் பெண்கள் வகித்து வரும் முக்கிய பங்கை சுட்டிக்காட்டிய சந்தோஷ் ஜா, உலகளவில் இந்த இரண்டு நாடுகளும் பெண்கள் நலனில் முன்னிலை வகிப்பதாக குறிப்பிட்டார்.

இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ், இந்திய மற்றும் இலங்கை பெண் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையேயான ஒத்துழைப்பு வலுப்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், கடந்த மே மாதம், இலங்கை பாராளுமன்றத்தின் 22 பெண் உறுப்பினர்களில் 3 பேர், இந்தியாவின் பாராளுமன்ற ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நடத்திய ஆரம்ப வழிகாட்டல் திட்டத்தில் பங்கேற்றனர்.

எதிர்காலத்தில் ஜனநாயக மதிப்புகளையும், சிறந்த நிர்வாக அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளும் வகையில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில்பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் மற்றும் பெண் எம்.பிக்கள் கலந்து கொண்டனர். (அ)



புங்குடுதீவு கண்ணகை அம்மன் என வழங்கும்

ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் இடம் பெறுகின்ற தவறுகளுக்கு எதிரான

மாபெரும் மக்கள் எழுச்சிப் போராட்டம்!

• காலம் : 21- 06- 2025 • நேரம் : காலை 10 மணி முதல் • இடம் : ஆலய முன்றலில்

எமது அன்புக்குரிய தீவுப்பகுதி மக்களே!

சமூகத்தில் பெருமதிப்புக்குரிய ஆன்றோர்களும், சான்றோர்களும் அங்கம் வகித்த ஆலய நிர்வாக சபையானது தற்போதைய காலகட்டங்களில் பொறுப்பற்ற நபர்களால் நிர்வகிக்கப்பட்டு எமது ஆலயத்தினதும் எமது புங்குடுதீவு மக்களினதும் கீர்த்திக்கும், புகழுக்கும் பங்கம் விளைவிக்கப்படுகிறது.

மேற்படி நிர்வாக சபை தலைமையின் தவறான செயல்களான: -

- ஆலய புனித தன்மையை பேணாமல் நடத்தல்.
- ஆலய பக்தர்களை சமமாக மதிக்காமல் நடத்தல்.
- ஆலய அயலில் வசிக்கும் மக்களுக்கு அன்னதான உணவை கொடுக்க மறுத்தல்.
- ஆன்மா லயப்படும்( அமைதி ) ஆலயத்தை வியாபார நிலையமாக மாற்றியமை.
- மாதாந்தம் அளவுக்கு அதிகமாக வீண் செலவுகளை செய்தல்.
- ஆலய திருட்டு சம்பவங்களை மூடி மறைத்தல் மற்றும் உடந்தையாக இருத்தல்.
- தங்களுக்கு சார்பாக முக்கியமான இடங்களில் கண் காணிப்பு கேமராக்களை பொருத்தாமல் தவிர்த்தல்.
- பிரதான திருவிழாக்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு கோராமல் திருட்டு சம்பவங்களுக்கு இடமளித்தல்.
- ஆலய திருவிழாக்களுக்கு அதிகமாக ,முறைகேடாக பணம் வசூலித்தல்.
- மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமல் தவிர்த்தல்.
- பொறுப்பு வாய்ந்த அரசாங்க அதிகாரிகளின் அழைப்புக்களை உதாசீனம் செய்தல்.
- பொதுமக்களின் பணத்தை பெற்று பல வருடங்களாக கணக்கு காட்டாமல் தவிர்த்தல்.
- ஆலய யாப்பை மீறி ஒரு குடும்பத்தில் இருவர் பதவி வகித்தல். புங்குடுதீவில் நடாத்தவேண்டிய கூட்டங்களை ஆலய யாப்பினை மீறி தமக்கு சாதகமாக கொழும்பில் நடாத்துதல்.
- பொதுக் கூட்டத்தை நடாத்தாமல் தவிர்த்தல்.
- தவறுகளை சுட்டிக்காட்டி நீதி கோரிய ஏனைய அங்கத்தவர்கள் மீது வழக்கு பதிவு செய்து பிரசித்தி பெற்ற எமது ஆலயத்திற்கு அவதூறு ஏற்படுத்தியமை.

ஆகிய மேற்படி தவறான நடவடிக்கைகளுக்கு எதிராக தீவுப்பகுதி மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றாக அணிதிரண்டு எமது எதிர்ப்பை தெரிவிப்போம். அன்னை கண்ணகியின் ஆலயத்தில் ஒன்று கூடுவதால் நாம் அனைவரும் எமது தமிழ் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையிலான ஆடைகளை அணிந்து அமைதியாக போராடுவோம்.

இவ்வண்ணம்
கண்ணகை அம்மன் அடியார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# சிறுவர் பாலியல் துன்புறுத்தல் திருமலையில் அதிகரித்துள்ளது

## கடந்த 5 மாதங்களில் 21 சம்பவங்கள் 371 சிறார் பாதுகாப்பற்ற நிலையில்

திருகோணமலை, ஜூன் 19

**திருகோணமலை மாவட்டத்தில் சிறுவர்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள் அதிகரித்துள்ளன என்று கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தர தெ்ரிவித்தார்.**

சரோஜா குழந்தை பராமரிப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்தல் திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு செயல்திட்டம் தம்பலகாமம் பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த ஐந்து மாதங்களில் மட்டும் சிறுவர் பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பில் 21 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நிலாவெளி பொலிஸ் பிரிவில் 4 சிறுவர்களும் உப்புவெளி பொலிஸ் பிரிவில் 3 சிறுவர்களும் சிறீபுர பொலிஸ் பிரிவில் 4 சிறுவர்களும் மூதூரில் 3 சிறுவர்களும் கிண்ணியா 4 சிறுவர்களும் புல்மோட்டை, திருகோணமலை, துறைமுக பொலிஸ் பிரிவுகளில் தலா ஒரு சிறுவர் பாலியல் துன்புறுத்தல் சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

அத்துடன், மாவட்டத்தில் பாதுகாப்பற்ற சிறுவர்கள் 371 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். இதன்படி, உப்புவெளி பொலிஸ் பிரிவில் 60 சிறார்களும் திருகோணமலையில் 43 துறைமுக பிரிவில் 05 சீனன்குடாவில் 18, கிண்ணியாவில் 43, மூதூரில் 47 சம்பூரில் 52, நிலாவெளியில் 24, குச்சவெளியில் 23, புல்மோட்டையில் 30, சிறீபுரவில் 26 சிறுவர்களும் இனங்காணப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)



# கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரானார் பிரதீபன்

மட்டக்களப்பு, ஜூன் 18

கிழக்கு பல்கலைக்கழத்தின் 11ஆவது துணைவேந்தராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் பரராஜசிங்கம் பிரதீபன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தனது கடமைகளை பெறுப்பேற்றுக் கொண்டார்.

துணைவேந்தரை தெரிவு செய்வதற்கான நேர்முக பரீட்சை இரு மாதங்களுக்கு முன்னர் பல்கலைக்கழக பேரவையால் நடத்தப்பட்டது. 8 பேர் நேர்முக தேர்வுக்கு தோற்றினர். இதில், விஞ்ஞானபீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் பரராஜசிங்கம் பிரதீபன் உட்பட மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் பெயர் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டது.

முதல் நிலையை பெற்ற விஞ்ஞானபீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் பரராஜசிங்கம் பிரதீபனை ஜனாதிபதி கிழக்கு பல்கலைக்கழகத்தின் 11ஆவது துணைவேந்தராக அறிவித்தார். இதையடுத்து, அவர் நேற்றுமுன்தினம் கடமைகளை பொறுப்பேற்றார். (ஐ)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் எரிபொருள் தட்டுப்பாடில்லை!

## அரச அதிபர் அறிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 18

மட்டக்களப்பு மாவட்டத்தில் எரிபொருட்களுக்கு தடுப்பாடு இல்லை என்று மாவட்ட அரசாங்க அதிபர் ஜே. ஜே. முரளிதரன் தெரிவித்துள்ளார்.

ஈரான் - இஸ்ரேல் மோதலை தொடர்ந்து எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற அச்சத்தில் மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகளில் காத்திருந்து எரிபொருளை பெற்று வருகின்றனர். இந்த நிலையிலேயே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்திலும் எந்தவிதமான தட்டுப்பாடும் இல்லை. மக்கள் வீணாக சென்று மக்கள் வரிசையில் நிற்க வேண்டாம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# நிலாவெளி கடற்கரையை அபிவிருத்தி செய்ய திட்டம்

திருகோணமலை, ஜூன் 19

திருகோணமலை மாவட்டத்தின் முக்கிய சுற்றுலா மையமான நிலாவெளி கடற்கரை பிரதேசத்தை வசதிகளுடன் கூடிய கடற்கரையாக அபிவிருத்தி செய்வது தொடர்பான கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட இந்த கள ஆய்வில் குச்சவெளி பிரதேச செயலாளர், குச்சவெளி பிரதேச சபையின் செயலாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர், கரையோர பாதுகாப்பு உத்தியோகத்தர், வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் எனப் பலரும் பங்கேற்றனர்.

இந்தக் கடற்கரை பல வசதிகளுடன் மேம்பாடு செய்யப்பட்டு குச்சவெளி பிரதேச சபையின் கீழ் பராமரிப்பு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வீதிக் கரையில் உறங்கியவர் வாகனம் ஏறியதில் மரணம்!

## மட்டக்களப்பில் அதிகாலை துயரம்

மட்டக்களப்பு, ஜூன் 19

வீதியின் கரையில் படுத்துறங்கியவர்மீது வாகனம் ஏறியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். எனினும், அவருக்கு அருகில் படுத்திருந்தவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை மட்டக்களப்பு - கரடியனாறு - தும்பாஞ்சோலை பகுதியில் பதுளை வீதியில் இடம்பெற்றுள்ளது.

இதில், மண்டூர் சின்னவத்தையை சேர்ந்த செல்வம் சாந்தன் (வயது 25) என்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்த இளைஞரும் மற்றொருவரும் வேளாண்மை காவலுக்காக அந்தப் பகுதியில் தங்கியிருந்தனர். இந்த நிலையில், வீதிக் கரையில் படுத்துறங்கியுள்ளனர். இந்த நிலையிலேயே வாகனம் ஒன்று இளைஞர்மீது ஏறியது. இதில், அவர் படுகாயமடைந்தார். அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படும்போது வழியில் உயிரிழந்தார். (ஐ)

# மாகாண சபை தேர்தலை உடன் அறிவிக்கவேண்டும்

## சாணக்கியன எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 18

மாகாண சபைகள் தேர்தலை நடத்தும் திகதியை அரசாங்கம் உறுதியாக அறிவிக்க வேண்டும் - என்று மட்டக்களப்பு மாவட்ட இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர்,

"மாகாண சபைகள் தேர்தலை விரைவாக நடத்தும் வகையில் தனிநபர் பிரேரணை ஒன்றை நான் கொண்டு வந்தேன். இந்த பிரேரணை ஆளும் தரப்பு பிரேரணையாக கருதி சட்டத் திருத்தத்தை விரைவாக மேற்கொண்டு மாகாண சபைகள் தேர்தலை விரைவாக நடத்தும் சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தேர்தல் முறைமையில் காணப்படும் சட்ட சிக்கலுக்கு தீர்வு காண்பதற்கு நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

காலம் காலமாக தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பில் தொடர்ச்சியாக பேசுகிறோம். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள இளைஞர், யுவதிகள் விளையாட்டுத்துறையில் திறமையுடையவர்களாக உள்ளநிலையிலும் அவர்களுக்கு வாய்ப்பு மறுக்கப்படுகிறது.

சுய முயற்சியின் அடிப்படையில் விளையாட்டுத்துறையில் முன்னேற்றமடைவதற்கு தமிழ் இளைஞர்கள் முயற்சிக்கின்ற போதிலும் அவர்களுக்கு அரசாங்கம் எவ்வித ஒத்துழைப்புகளையும் வழங்குவதில்லை - என்றும் அவர் சாடினார். (ஐ)

# திருமலை விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

திருகோணமலை, ஜூன் 19

வீதியை கடக்க முயன்றவரை மோட்டார் சைக்கிள் மோதித் தள்ளியதில் ஒருவர் உயிரிழந்தார்.

திருகோணமலை - ஆனந்தகுளம் - அம்பேபுஸ்ஸ வீதியில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில், 56 வயது நபர் ஒருவரே உயிரிழந்தார்.

திருகோணமலை நகரிலிருந்து ஆனந்தகுளம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் வீதியை கடக்க முயன்றவரை மோதியது. இதில் படுகாயமடைந்த பாதாசாரி திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் உயிரிழந்தார்.

இந்த விபத்து தொடர்பில் 19 வயது இளைஞரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)



# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

கல்முனை, ஜூன் 19

ஆற்றோரத்தில் நீண்ட காலமாக இயங்கி வந்த கசிப்பு தயாரிப்பு நிலையம் சம்மாந்துறை ஊழல் ஒழிப்பு பிரிவினரால் முற்றுகையிடப்பட்டது.

அம்பாறை - சம்மாந்துறை - மல்வத்தை பகுதியில் இடம்பெற்ற இந்த முற்றுகையின்போது, கசிப்பு 200 லீற்றர், 2 இரும்பு பரல், செப்பு குழாய் ,1 எரிவாயு அடுப்பு, 4 அடி நீளமுடைய இறப்பர் குழாய் உள்ளிட்ட உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன.


குறித்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை நடத்தி வந்த சந்தேக நபர் தலைமறைவான நிலையில் அவரை கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சான்றுப்பொருட்களை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் தலைவர் கமேனி நிபந்தனை எதுவுமின்றி சரணடைய வேண்டும்!

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்

### போர் தொடங்குகிறது என்று ஈரான் தலைவர் பதில்



நியூயோர்க், ஜூன் 19

**ஈரானின் உச்ச தலைவர் என்று அழைக்கப்படும் அயத்துல்லா அலி கமேனி நிபந்தனையின்றி சரணடைய வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.**

அத்துடன், அவரை நாங்கள் இப்போதைக்கு கொல்லப் போவதில்லை என்றும் தனது சமூகவலைதளமான ட்ருத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், "ஈரானின் "உச்ச தலைவர்" என்று அழைக்கப்படுபவர் எங்கு மறைந்திருக்கிறார் என்பது எங்களுக்குத் தெரியும். அவர் ஓர் எளிதான இலக்கு. ஆனால், அங்கு பாதுகாப்பாக இருக்கிறார். நாங்கள் அவரை வெளியே கொண்டுவரப் போவதில்லை (கொல்லப் போவதில்லை!), குறைந்தபட்சம் இப்போதைக்கு அது நடக்காது. ஆனால் பொதுமக்கள் மற்றும் அமெரிக்க வீரர்கள் மீது ஏவுகணைகள் வீசப்படுவதை நாங்கள் விரும்பவில்லை. எங்கள் பொறுமை குறைந்து வருகிறது. இந்த விஷயத்தில் உங்கள் கவனத்திற்கு நன்றி", என்று கூறியுள்ளார்.

இவரின், இந்தப் பதிவுக்கு பதிலளிக்கும் விதமாக ஈரான் தலைவர் கமேனி தனது சமூகவலைத்தளத்தில், "ஈரான் இஸ்ரேலுடன் ஒருபோதும் சமரசம் செய்யாது", என்றும், "சியோனிஸ்ட்களுக்கு நாங்கள் கருணை காட்ட மாட்டோம்", "போர் தொடங்குகிறது", என்றும் பதிவுகளை இட்டுள்ளார்.

இதனிடையே, கனடாவில் நடக்கும் ஜி-7 மாநாட்டில் பங்கேற்றுள்ள டொனால்ட் ட்ரம்ப் அவசரமாக நாடு திரும்பவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# ஈரானின் புதிய இராணுவ தளபதியும் கொல்லப்பட்டார்!

## இஸ்ரேல் அறிவிப்பு



டெல்அவிவ், ஜூன் 19

ஈரான்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இராணுவத் தளபதி அலி ஷத்மானி கொல்லப்பட்டார் என்று இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

ஈரானின் உயர் அதிகாரம்மிக்க படையணியான புரட்சிகர காவல் படைக்கும் இராணுவத்துக்கும் இடையிலான கூட்டு நடவடிக்கைகளை திட்டமிடும் தலைமையக தலைவராக ஷாட்மானி அண்மையில் பொறுப்பேற்றிருந்தார்.

கடந்த வாரம் இஸ்ரேலிய தாக்குதலில் அவருக்கு முன்னோடியாக இருந்த கோலமாலி ரஷீத் கொல்லப்பட்டமையை தொடர்ந்து அவர் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். எனினும், ஈரான் தரப்பு இந்த தகவலை உறுதி செய்யவில்லை.

(ஐ)

# உக்ரைன் தலைநகர்மீதான தாக்குதலில் 15 பேர் மரணம்



கீவ், ஜூன் 19

உக்ரைன் தலைநகர் கீவ் மீதான ரஷ்ய தாக்குதல்களில் குறைந்தது 15 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

திங்கட்கிழமை இரவு முதல் செவ்வாய்க்கிழமை நண்பகல் வரை நடத்தப்பட்ட நீண்ட இந்தத் தாக்குதலில் 440 ட்ரோன்கள் மற்றும் 32 ஏவுகணைகள் தாக்கின என்று உக்ரைனின் உள்துறை அமைச்சர் இஹோர் கிளைமென்கோ தெரிவித்துள்ளார்.

இதேசமயம், உக்ரைனின் 147 ட்ரோன்களை வழிமறித்து அழித்ததாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

(ஐ)

# ஈரானின் அணுசக்தி தளங்களை தாக்க இணைகிறது அமெரிக்கா



வாஷிங்டன், ஜூன் 19

ஈரானின் அணுசக்தி தளங்கள் மீது இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதல்களில் அமெரிக்காவும் இணையவுள்ளதாக பி.பி.ஸியின் அமெரிக்க இணை நிறுவனமான சி.பி.எஸ். செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரானில் 21 அணுசக்தி தளங்கள் செயல்படுகின்றன. இவற்றில் பெரும்பாலான அணுசக்தி தளங்களை இஸ்ரேல் விமானப் படை ஏற்கெனவே அழித்துவிட்டது. ஈரானின் போர்டோ நகரில் மலைக்கு அடியில் மிகப் பெரிய அணுசக்தி தளம் செயல்படுகிறது. சுமார் 90 மீற்றர் ஆழத்தில் உள்ள இந்த அணுசக்தி தளம் ஈரானின் அணு சக்தி கோட்டை என்று அழைக்கப்படுகிறது.

அமெரிக்க இராணுவத்தின் பூமியை துளைக்கும் ஜி.பி.யு.-57ஏ ரக குண்டுகள் மூலம் தாக்குதல் நடத்தினால் மட்டுமே போர்டோ அணு சக்தி தளத்தை அழிக்க முடியும். இதுதொடர்பாக ஜனாதிபதி ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் தீவிர ஆலோசனை நடத்தி வருகிறார் என்றும் கூறப்படுகிறது.

இதனிடையே, அமெரிக்க கடற்படையின் விமானம் தாங்கி போர் கப்பலான நிமிட்ஸ், தென் சீனக் கடலில் தரித்திருந்தது. அணு சக்தியில் இயங்கும் இந்த போர் கப்பல் மத்திய கிழக்கு பகுதிக்கு விரைந்து செல்கிறது. நிமிட்ஸ் போர்க் கப்பலில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படையினரும் 60இற்கும் மேற்பட்ட போர் விமானங்களும் உள்ளன என்று கூறப்படுகிறது.

இதேசமயம், சர்வதேச அணுசக்தி நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், "ஈரானின் நடான்சு அணுசக்தி தளம் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எனினும், அந்த நாட்டின் போர்டோ, இஸ்பஹான் அணுசக்தி தளங்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லை" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈரான் தலைநகர் தெஹ்ரான், நடான்சு பகுதிகளில் அணுக்கதிர் வீச்சு ஏற்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

# உணவுக்காக காத்திருந்தோர்மீது மீண்டும் இஸ்ரேல் துப்பாக்கிச்சூடு

## 45 பொதுமக்கள் உயிரிழப்பு

காசா, ஜூன் 19

அமெரிக்காவின் ஆதரவில் இயங்கும் காசா மனிதாபிமான அறக்கட்டளையின் நிவாரணத்தை பெற காத்திருந்தவர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 45 பேர் உயிரிழந்தனர் என்று காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தங்களை நெருங்கி அச்சுறுத்தல் ஏற்படுத்தியதால் சந்தேக நபர்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் படைகள் தெரிவித்துள்ளன.

காசாமீது கடுமையான முற்றுகையை கடந்த மூன்று மாதங்கள் விதித்திருந்த இஸ்ரேல் தற்போது அதனை சற்று தளர்த்தியுள்ளது. இந்த நிலையில், காசா மனிதாபிமான அறக்கட்டளையிடமிருந்து உலர் உணவை பெற நூற்றுக்கணக்கான பலஸ்தீனர்கள் கூடியிருந்தனர்.

இந்த நிலையிலேயே, அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஆல் - ஆலம் பகுதியில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 45 பேர் உயிரிழந்தனர்.

**உணவுக்காக காத்திருந்த ஒருவரின் இறுதிச்சடங்கில் எடுக்கப்பட்டது.**
**(நன்றி - பி. பி. ஸி)**



நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்காவின் ஆதரவில் காசா மனிதாபிமான அறக்கட்டளை காசா மக்களுக்கு உலர் உணவை விநியோகித்து வருகிறது. கடந்த மே 26ஆம் திகதி இந்த நடவடிக்கை தொடங்கப்பட்ட பின்னர் உணவு பெறுவதற்காக கூடியவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் இதுவரை குறைந்தது 300 பேர் கொல்லப்பட்டனர். 2 ஆயிரத்து 600இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனினும், இந்த இறப்பு எண்ணிக்கையை இஸ்ரேல் மறுத்துள்ளது.

(ஐ)

# மொசாட் மையத்தின்மீது தாக்குதல் நடத்தினோம்

## ஈரான் அறிவிப்பு

தெஹ்ரான், ஜூன் 19

டெல் அவிவில் உள்ள இஸ்ரேலின் உளவுத்துறை அமைப்பான மொசாட் மையத்தைத் தாக்கியதாக ஈரான் இராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் - ஈரான் இடையிலான போர் தீவிரம் பெற்று வருகிறது. இந்த நிலையில், ஈரான் அரச தொலைக்காட்சி,


"இஸ்ரேலின் சியோனிச ஆட்சி இராணுவத்தின் இராணுவ புலனாய்வு மையமான அமானையும், டெல் அவிவில் உள்ள சியோனிச ஆட்சியின் பயங்கரவாத நடவடிக்கை திட்டமிடல் மையமான மொசாட்டையும் தாக்கினோம். அது தற்போது தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அன்றைய தினம் இஸ்ரேல் மீது ஏவுகணை தாக்குதல்களை தீவிரப்படுத்தியிருந்தை சர்வதேச செய்திகள் உறுதிப்படுத்தின என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையுடனான டெஸ்ட்: பங்களாதேஷ் வலுவானநிலை!



காலி, ஜூன் 19

இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி 4 விக்கெட்கள் இழப்புக்கு 383 ஓட்டங்களை பெற்று வலுவான நிலையில் உள்ளது.

இலங்கை வந்துள்ள பங்களாதேஷ் அணி டெஸ்ட் போட்டியில் விளையாடி வருகிறது. நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்த டெஸ்ட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது.

இதன்படி, பங்களாதேஷ் அணியின் தொடக்க வீரர்களாக ஷத்மான் இஸ்லாம்- அனமுல் ஹக் ஆகியோர் களமிறங்கினர். இதில், அனமுல் ஹக் "டக்அவுட்" ஆனார். அவரை தொடர்ந்து ஷத்மான் இஸ்லாம் 14 ஓட்டங்களிலும் மொமினுல் ஹக் 29 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

இதன்பின்னர் வந்த அணித் தலைவர் நஜ்முல் ஹொசைன் சாண்டோ- முன்னாள் அணித் தலைவர் முஷ்பிகுர் ரஹீம் இணை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அத்துடன், இந்த இணை சதம் அடித்தும் அசத்தியது.

முதல் நாள் ஆட்டம் முடிவடைந்தபோது 3 விக்கெட்கள் இழப்புக்கு 292 ஓட்டங்க்ள எடுத்திருந்தது. நஜ்முல் ஹொசைன் சாண்டோ 136 ஓட்டங்கள், முஷ்பிகுர் ரஹீம் 105 ரன்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர்.

இந்த நிலையில், நேற்றைய நாள் ஆட்டம் ஆரம்பமானது. தொடர்ந்து இருவரும் துடுப்பெடுத்தாடினர். பொறுப்பாக ஆட்டத்தை இருவரும் தொடங்கிய போதிலும், 148 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் அசித்த பெர்னாண்டோவின் பந்துவீச்சில் அஞ்சலோ மத்தியூஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

முஸ்பிகுர் ரஹீமிடம் இணைந்த லிட்டன் தாஸ் 5ஆவது விக்கெட்டுக்காக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். நேற்று மதிய போசனத்துக்காக ஆட்டம் நிறுத்தப்பட்டபோது பங்களாதேஷ் 4 விக்கெட்கள் இழப்புக்கு 383 ஓட்டங்களை பெற்றிருந்தது.

முஸ்பிகுர் ரஹீம் 7 பௌண்ட்ரிகள் அடங்கலாக 141 ஓட்டங்களுடனும் லிட்டன் தாஸ் 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 43 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

பந்துவீச்சில் அசித்த பெர்னாண்டோ, தரிந்து ரத்நாயக்க இருவரும் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர். (ஐ)




# ஐ. சி. சி. தரவரிசை மந்தனா முதலிடம்

டுபாய், ஜூன் 19

மகளிர் ஒருநாள் போட்டிகளுக்கானஐ. சி. சியின் தரவரிசை பட்டியலில் இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா 2019ஆம் ஆண்டுக்கு பின்னர் முதன்முறையாக முதலிடம் பிடித்துள்ளார்.

அண்மையில் நடந்த இலங்கை, தென்னாபிரிக்கா அணிகளுக்கு எதிரான முத்தரப்பு தொடரில் அவர் சிறப்பாக விளையாடியிருந்தார். இதையடுத்தே அவர் தரவரிசையில் முதலிடத்துக்கு முன்னேறினார்.

இங்கிலாந்தின் நாட் ஸ்கைவர் பிரண்ட் இரண்டாவது இடமும் தென்னாபிரிக்காவின் வால்வார்ட் 3ஆவது இடமும் பிடித்துள்ளனர். ஒருநாள் தரவரிசை பட்டியலில் மந்தனா தொடர்ந்து முதல் 10 இடங்களுக்குள் இடம்பிடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# ஓய்வு பெறும் மத்தியூஸுக்கு வீரர்கள் மரியாதை அளிப்பு!

காலி, ஜூன் 19

பங்களாதேஷுடனான டெஸ்ட் போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறும் அஞ்சலோ மத்தியூஸுக்கு சகவீரர்கள் மரியாதை வழங்கினர்.

நேற்று முன்தினம் காலி மைதானத்தில் டெஸ்ட் போட்டி ஆரம்பமானபோது மத்தியூஸுக்கு வீரர்கள் அணிவகுத்து நின்று மரியாதை வழங்கினர்.

அஞ்சலோ மத்தியூஸ் இலங்கை அணிக்காக 118 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி (சராசரி: 45) 16 சதங்களுடன் 8,167 ஓட்டங்களை குவித்துள்ளார்.

226 ஒருநாள் போட்டிகளில் 3 சதங்களுடன் 5,916 ஓட்டங்கள் (சராசரி: 40) விளாசினார். பந்து வீச்சில் 120 விக்கெட்களை கைப்பற்றினார். மேலும் 90 ரி - 20 போட்டிகளில் 1,416 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதில், 6 அரைச் சதங்களும் அடங்கும். (ஐ)

# பெர்லின் ரென்னிஸ் ஒசாகா தோல்வி!

பெர்லின், ஜூன் 19

பெர்லின் ஓப்பின் ரென்னிஸ் தொடரில் முன்னணி வீராங்கனை நவோமி ஒசாகா அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

பெண்கள் மட்டும் பங்கேற்கும் பெர்லின் ஓப்பின் ரென்னிஸ் தொடர் ஜேர்மனியில் நடந்து வருகிறது.

முதல் சுற்று போட்டி ஒன்றில் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் ஜப்பான் வீராங்கனை நவோமி ஒசாகா, ரஷ்யாவின் சாம்சோனோவாவுடன் மோதினார்.

இதில், சிறப்பாக ஆடிய சாம்சோனோவா 3-6, 7-6 (7-3), 6-4 என்ற செற் கணக்கில் வென்றார். இதன்மூலம் முன்னணி வீராங்கனையான நவோமி ஒசாகா அதிர்ச்சி தோல்வி அடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.





# அணித் தலைமையை நானே நிராகரித்தேன்

## இந்திய வீரர் பும்ரா தெரிவிப்பு

புதுடில்லி, ஜூன் 19

இந்திய டெஸ்ட் அணித் தலைமையை தானே நிராகரித்தார் என்று ஜஸ்ப்ரீத் பும்ரா தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு சென்றுள்ள இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான போட்டி நாளை ஆரம்பமாகிறது.

இந்த தொடரில் இந்திய அணியின் தலைவராக ஷுப்மன் கில்லும் உப தலைவராக ரிஷப் பந்தும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பும்ராவுக்கு டெஸ்ட் அணித் தலைவர் பதவி வழங்கப்படும் என்று அனைவரும் எதிர்பார்த்த நிலையில் ஷுப்மன் கில்லுக்கு வழங்கப்பட்டமை சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

இந்த நிலையில், டெஸ்ட் அணியின் தலைமை பதவியை தருவதற்கு பி. சி. சி. ஐ. அணுகியதாகவும் ஆனால், தான் அதை வேண்டாம் என்று நிராகரித்து விட்டார் என்றும் பும்ரா கூறியுள்ளார்.

பணிச்சுமை மற்றும் அடிக்கடி காயம் ஏற்படுவதை கருத்தில் கொண்டு அந்த வாய்ப்பை தான் நிராகரித்தார் என்றும் அவர் விளக்கமளித்துள்ளார். (ஐ)

# டெஸ்ட் போட்டி நாட்களை நான்காக குறைக்க திட்டம்

டுபாய், ஜூன் 19

உலக டெஸ்ட் சம்பியன் ஷிப் தொடரில் சிறிய நாடுகள் ஆடும் டெஸ்ட் போட்டியின் நாட்களை 4ஆக குறைப்பதற்கு ஐ. சி. சி. திட்டமிட்டுள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன் ஷிப் போட்டியை ஐ. சி. சி. (சர்வதேச கிரிக்கெட் சபை) 2019ஆம் ஆண்டு அறிமுகம் செய்தது. இதுவரை 3 தொடர் முடிந்துள்ளது.

நியூசிலாந்து (2019-21), அவுஸ்திரேலியா (2021-23), தென்னாபிரிக்கா (2023-25) ஆகிய நாடுகள் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்பை கைப்பற்றியுள்ளன.

இந்த நிலையில் 2027-29ஆம் ஆண்டுக்கான உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் சிறிய நாடுகளுக்கான டெஸ்ட்களை 4 நாட்களாக குறைக்க ஐ. சி. சி. தயாராக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதேநேரத்தில், இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய 3 அணிகளும் மாற்றமின்றி வழக்கமான 5 நாட்களுக்கு விளையாடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. சிறிய நாடுகள் விளையாடும் டெஸ்ட்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் அவற்றுக்கான செலவுகளை குறைக்கவும் இந்த முடிவு மேற்கொள்ளப்படுவதாக கூறப்படுகிறது.

லண்டனின் லோர்ட்ஸ் மைதானத்தில் கடந்த வாரம் நடைபெற்ற உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதி போட்டியின்போது, 2027-29 டெஸ்ட் தொடரில் சிறிய அணிகளுக்கான டெஸ்டை 4 நாட்களாக குறைப்பது தொடர்பாக விவாதிக்கப்பட்டது. அப்போது, ஐ.சி.சி தலைவர் ஜெய் ஷா இந்த முடிவுக்கு தனது ஆதரவை தெரிவித்தார் என்றும் கூறப்பட்டது.

அட்டவணையில் அதிக நாட்களை பிடிப்பதுடன், செலவும் அதிகமாகிறது. இதனால், டெஸ்ட் தொடரில் பங்கேற்க சிறிய நாடுகள் தயக்கம் காட்டுகின்றன என்றும் கூறப்படுகிறது.

டெஸ்ட் தொடரை 4 நாட்களாக குறைக்கும்போது ஒருநாளில் வீசப்படும் ஓவர்களை 90இலிருந்து 98ஆக அதிகரிக்கவும் ஆலோசிக்கப்படுகிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்வெட்டித்துறை...

வல்வெட்டித்துறை நகர சபையில் கடந்த உள்ளூராட்சி தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 7 ஆசனங்களையும் இலங்கை தமிழ் அரசு கட்சி 5, தேசிய மக்கள் சக்தி 3, ஈ. பி. டி. பி ஓர் ஆசனத்தையும் பெற்றன.

தவிசாளர் தெரிவுக்கான போட்டியில் தேசிய மக்கள் சக்தி நடுநிலைமை வகித்தது. தமிழ் அரசு கட்சிக்கு ஈ. பி. டி. பி. ஆதரவு வழங்கியது.

வாக்களிப்பில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட திருமதி தவமலர் சுரேந்திரநாதனுக்கு 7 வாக்குகளும் அவரை எதிர்த்த தமிழ் அரசு கட்சியின் மகாலிங்கம் மயூரனுக்கு 6 வாக்குகளும் கிடைத்தன. ஒரு வாக்கு முன்னிலை பெற்று தவமலர் தவிசாளராக தெரிவானார்.

இதேபோன்று, பிரதி தவிசாளராக அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் நாகதம்பி பத்மநாதன் தெரிவானார். (ஐ)

## முள்ளிவாய்க்கால்...

அதனால் தான் அவரின் தலைமைப் பதவிக்கு எதிராகக்கூட கட்சிக்குள் கோஷங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. தற்போது மட்டும் அல்ல தேர்தலுக்கு முன்பு இருந்தே தேசிய மக்கள் சக்திக்கு எதிராக சாணக்கியன் உள்ளிட்டவர்கள் போலிக் கருத்துகளை பரப்பி வந்தனர். அதன் மற்றுமோர் அங்கமே பிள்ளையான் கட்சியுடன் கூட்டு கதையாகும். தேசிய மக்கள் சக்தி, பிள்ளையானின் கட்சியுடன் கூட்டு சேரவில்லை. எந்தவொரு கட்சியுடனும் எமக்கு டீல் கிடையாது.

என்மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் சாணக்கியன் ராஜபக்ஷக்களுடன் கரம்கோர்த்திருந்த நபர். முள்ளிவாய்க்கால் பேரவலத்துக்கு காரணமாக இருந்தவர்களுடன் யாழ்ப்பாணத்தில் இவர்கள் ஒன்று சேரலாம். சித்து விளையாட்டுகள் மூலம் தமிழ் மக்களை ஏமாற்றலாம் என சாணக்கியன் போன்றவர்கள் நினைக்கலாம். ஆனால், மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.

இலஞ்சம், ஊழல்களில் ஈடுபட்டவர்கள் சிறையில் அடைக்கப்பட்டு வருகின்றனர். அதனால்தான் களவாணிகள் கூட்டு சேர்ந்து குட்டி சபைகளில் ஆட்சி அமைக்க முற்படுகின்றனர். அந்த எதிர்பார்ப்பிலும் தற்போது மண்கௌவியுள்ளனர். எனவே, சஜித்தின் தலைமைத்துவம் வேண்டாம் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர்." - என்றார். (ஐ)

## தமிழ் அரசின்...

உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு எந்த சபைகளில் அதிகூடிய ஆசனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதோ, அந்த சபைகளில் நாங்கள் ஆட்சி அமைப்பதற்கு ஏனைய கட்சிகள் எங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என நாங்கள் கூறியிருந்தோம். இதனை ஒரு கோட்பாடாக நாங்கள் கூறியிருந்தோம்.

இந்தத் தேர்தலில் மட்டுமல்ல, இதற்கு முன் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலிலும் கூறியிருந்தோம். பல கட்சிகள் இந்த கோட்பாட்டை ஏற்றுக் கொண்டன. எந்த கட்சிக்கு அதிக ஆசனங்கள் உள்ளதோ அந்த கட்சி ஆட்சி அமைக்க ஏனைய கட்சிகள் ஆதரவு வழங்க வேண்டும் என்ற கோட்பாட்டை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அவ்வாறு பார்க்கின்றபோது வடக்கு, கிழக்கில் இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு 35 சபைகளில் அதிகூடிய ஆசனங்கள் இருக்கின்றன. அந்த சபைகளில் நாங்கள் ஆட்சி அமைக்க வேண்டும்.

இந்த கோட்பாட்டுக்கு இணங்கிய ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் அந்த இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே செயல்பட்டிருக்க வேண்டும். மக்கள் ஆணை வழங்கிவிட்டார்கள். எந்த கட்சிக்கு அதிக ஆசனங்கள் கிடைத்துள்ளதோ அந்த கட்சியே ஆட்சி அமைக்க வேண்டும் - என்றார். (ஐ)

# ஹலோ ட்ரஸ்ற் பணியாளர்களுக்கு கௌரவிப்பு நிகழ்வு முகமாலையில்

கிளிநொச்சி, ஜூன் 19

கிளிநொச்சி முகமாலைப் பகுதியில், மனிதாபிமான கண்ணிவெடி அகற்றல் பணியை முன்னெடுக்கும் ஹலோ ட்ரஸ்ற் நிறுவனம், பணிகளை ஆரம்பித்து 13 ஆண்டுகள் ஆகின்ற நிலையில், 13 ஆவது ஆண்டு விழாவும், ஹலோ ட்ரஸ்ற் நிறுவனத்தில் 20 வருடங்களுக்கு மேலாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வரும் பணியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும், நேற்று முக மாலை அலுவலகத்தில் இடம் பெற்றது.

திட்ட முகாமையாளர் தலை மையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பங்கேற்றார்.

இந்த நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதி பர் எஸ். முரளிதரன், யாழ்ப் பாண மாவட்ட மேலதிக அர சாங்க அதிபர் க.ஸ்ரீமோகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முகமாலைப் பகுதியில், கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டிய 10.5 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில், 6 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில், கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## காங்கேசன்...

அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிலையில், காங்கேசன்துறை எரிபொருள் களஞ்சியசாலையிலிருந்து யாழ். மாவட்டத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருளை விநியோகிக்கும் பணி நேற்று முன்தினம் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டது.

முன்னதாக, யாழ். மாவட்டத்துக்கான எரிபொருள் விநியோகம் அநுராதபுரம் எரிபொருள் களஞ்சியசாலையிலிருந்தே மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேசிய...

கைப்பற்றியுள்ளது. இது முஸ்லிம் சமூகத்துக்கு இழைத்த பிறிதோர் அநீதியாகும் இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், கடந்த கால ஆட்சியாளர்கள் நீதித்துறையை முறையற்ற வகையில் பயன்படுத்தியமை தொடர் பில் இந்த பாராளுமன்றத்தில் பல விடயங்களை முன்வைத்துள்ளோம். கடந்த ஆட்சியாளர்களின் விளை யாட்டை இந்த அரசாங்கம் மெல்ல மெல்ல ஆரம்பித்துள்ளது.

மேல் நீதிமன்றத்தின் முன்னாள் தலைவர் பந்துல கருணாரத்னவுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சுனில் வட்டகல குறிப்பிட்டார். ஆனால், ஆட்சிக்கு வந்ததன் பின்னர் அந்த கருத்து முழுமையாக மறக்கடிக்கப்பட்டு நீதியரசர் பந்துல கருணாரத்னவுக்கு முழுமையான ஓய்வூதிய விடுமுறை வழங்கப்பட்டது.

மேல் நீதிமன்றத்தின் பதில் தலைவராக நீதியரசர் மொஹமட் லபார் நியமிக்கப்பட்டார். 2024 டிசெம்பர் மாதமளவில் உயர்நீதிமன்ற நீதியரசர் பதவிக்கு 15 வெற்றிடங்கள் காணப்பட்ட நிலையில் மொஹமட் லபாரை உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிக்கும் இயலுமை காணப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை அரசமைப்பு பேரவை கூடியது. இதன்போது உயர்நீதிமன்ற நீதியரசர் பதவிக்கு மொஹமட் லபாரின் பெயரை ஜனாதிபதி பரிந்துரைத்துள்ளார். ஆனால், இந்த பரிந்துரையை சபை முதல்வரான பிமல் ரத்நாயக்க மீளப்பெற்றார். உயர்நீதிமன்ற நீதியரசராக மொஹமட் லபாரின் பெயரை ஜனாதிபதி பரிந்துரைத்த போது ஏன் அந்த பரிந்துரையை மீளப்பெற வேண்டும்.

மேல் நீதிமன்றத்தின் பதில் தலைவர் மொஹமட் லபார் நேற்று (நேற்று முன்தினம்) சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். ஒருநாள் பதவியில் இருப்பதற்காகவாவது அவரை உயர்நீதி மன்ற நீதியரசராக நியமித்திருக்க வேண்டும். அரசாங்கத்தின் இந்த செயல்பாடு வெறுக்கத்தக்கது - என்றும் அவர் கூறினார்.

## பாராளுமன்றம்...

இதையடுத்து சபையில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

இதனால் சபை நடவடிக்கையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பதால் பாராளுமன்றத்தை இன்று காலை 9.30 மணி வரை ஒத்தி வைத்துள்ளதாக பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி அறிவித்தார். (ஐ)

## ஓடும்...

பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலை மாணவி முருங்கன் பொலிஸாருக்கு அளித்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே சிப்பாய் கைது செய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

## மனித உரிமைகள்...

தொடர்புடைய மனித புதைகுழியை பார்வையிடவும் அந்த அமைப்புகள் மனித உரிமைகள் ஆணையாளரை கோரியுள்ளன.

தவிர, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்வதற்கான உறுதிப்பாட்டை நிறைவேற்றவும், அதன் பயன்பாட்டுக்கு உடனடி தடையை அறிமுகப்படுத்தவும் அரசாங்கத்தை பகிரங்கமாக அழைக்கவும் - அந்த ஐந்து சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளும் வலியுறுத்தியுள்ளன. (ஐ)

## கெஹலிய...

அவரின் மனைவி குசும் பிரியதர்சினி எபா, இவர்களின் மகள் சந்துலா ரமாலி ரம்புக்வெல ஆகியோர் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

கைதான மூவரும் நேற்றைய தினம் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன்போதே மூவரும் பிணையில் செல்ல நீதிவான் அனுமதியளித்தார். ஒவ்வொரு சந்தேகநபரும் 50 ஆயிரம் ரூபாய் ரொக்க பிணை, 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஆள் பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

எனினும், சந்தேகநபர்கள் மூவராலும் பிணை கோரிக்கையை நிறைவேற்ற முடியவில்லை. இதனால், அவர்கள் மூவரும் மீண்டும் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

9.7 கோடி ரூபாயை சட்டவிரோதமாக கையகப்படுத்தியது தொடர்பில் மூவரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டு கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த வழக்கு எதிர்வரும் ஒகஸ்ட் 27ஆம் திகதி விசாரணைக்கு வரவுள்ளது.

முன்னதாக, கெஹலிய ரம்புவெல சுற்றுச்சூழல் அமைச்சராக பதவி வகித்த காலத்தில் அரசாங்கத்துக்கு 80 இலட்சம் ரூபாய்க்கு மேல் நிதி இழப்பை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கடந்த மே 7ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தனர். இதன்போது, அவரின் மகனும் கைதாகியிருந்தார். இந்த நிலையில், கடந்த 3ஆம் திகதி இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உருக்குலைந்த நிலையில் முதியவரின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 19

மானிப்பாயில் உருக்குலைந்த நிலையில் முதியவர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

மானிப்பாய் - வடலித்தோட்டத்தை சேர்ந்த கந்தமுத்து புஸ்பராசா (வயது 80) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

முதியவர் வசித்த வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசுவதாக அயலவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் அங்கு வந்த பொலிஸார் வீட்டுக்குள் சென்று பார்த்தனர். அப்போது, முதியவர் உருக்குலைந்த நிலையில் சடலமாக காணப்பட்டார்.

சடலத்தை மீட்ட பொலிஸார் அதனை உடற்கூற்று பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைத்தனர்.

குறித்த முதியவர் 4 நாட்களுக்கு முன்னரே உயிரிழந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஐ-05)

## வலி.வடக்கு...

காங்கிரஸ் சார்பில் ப. சாருஜன் ஆகியோர் முன்மொழியப்பட்டனர். இதனால் வாக்கெடுப்பு நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

நடத்தப்பட்ட பகிரங்க வாக்கெடுப்பில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் 10 உறுப்பினர்களுடன் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் (ஈ. பி. டி. பி) 3 உறுப்பினர்கள், தமிழ் மக்கள் கூட்டணியின் ஓர் உறுப்பினர் என 14 பேர் சுகிர்தனுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அவரை எதிர்த்த சாருஜனை அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் 6 உறுப்பினர்கள், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் 3 உறுப்பினர்களென 9 பேர் ஆதரித்தனர். இதனால், 5 வாக்குகளால் முன்னிலை பெற்ற சுகிர்தன் தவிசாளராக தெரிவானார்.

இதனிடையே இலங்கை தமிழ் அரசு கட்சியின் உறுப்பினரான பொன்னம்பலம் இராஜேந்திரம் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் 9 உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் இரு உறுப்பினர்களென 12 பேர் நடுநிலை வகித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உபதவிசாளராக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொன்னுத்துரை தங்கராசா தெரிவானார். (ஐ)

## வலி.கிழக்கு...

தவிசாளர் பதவிக்கு மூவர் போட்டியிட்டனர்.

இலங்கை தமிழ் அரசு கட்சி, தமிழ்த் தேசிய பேரவை, தேசிய மக்கள் முன்னணி ஆகியவை சார்பில் இவர்கள் போட்டியிட் டனர். இதன்போது, 36 உறுப்பினர்களை கொண்ட சபையில் 22 பேரே வாக்களித்தனர்.

பகிரங்கமாக நடத்தப்பட்ட தெரிவில் முதல் சுற்று வாக்கெடுப்பில் எவரும் அறுதி பெரும்பான்மையை பெறவில்லை. இரண்டாம் சுற்று வாக்கெடுப்பை பகிரங்கமாக நடத்துவதா அல்லது இரகசியமாக நடத்துவதா என்று நடத்தப்பட்ட வாக்கெடுப்பு சமநிலையில் முடிவடைந்தது. இதனால், எந்த முறையில் நடத்துவது என்பது திருவுளச்சீட்டு மூலம் தீர்மானிக்கப்பட்டது.

திருவுளச்சீட்டின்படி, இரகசியமாக வாக்கெடுப்பு நடத்துவது என்று தீர்மானமானது. இதனடிப்படையில், தமிழ்த் தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பில் தேர்தலில் தெரிவான நிரோஷ் பெரும்பான்மை பெற்று தவிசாளரானார். இதே போன்று, உபதவிசாளராக 14இற்கு 13 வாக்குகள் என்ற அடிப்படையில் அந்தக் கூட்டணியின் ஜனர்த்தனன் தெரிவானார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## பல்கலைக்கழக மாணவர் மரணம் மனுவை பரிசீலிக்க திகதி நிர்ணயம்

கொழும்பு, ஜூன் 19

சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் இரண்டாம் ஆண்டு மாணவர் சரித் தில்ஷான் தயானந்தாவின் மரணம் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை ஜூலை 18 ஆம் திகதி பரிசீலிக்க உயர் நீதிமன்றம் நேற்று திகதியிட்டது.

கடுமையான பகிடிவதைக்கு உள்ளாகி தற்கொலை செய்துக் கொண்ட சம்பவத்தின் ஊடாக, அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்கக் கோரியும், இந்த சம்பவம் குறித்து விரிவான விசாரணை நடத்த பிரதிவாதிகளுக்கு உத்தரவிடக் கோரியும் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் எஸ். துரை ராஜா, குமுதுனி விக்ரமசிங்க மற்றும் ஜனக் டி சில்வா ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அமர்வு முன்னிலையில் இந்த மனு நேற்று அழைக்கப்பட்டது. இதன்போது சமர்ப்பணங்களை உறுதிப்படுத்துவதற்காக மனுவை ஜூலை 18 ஆம் திகதி அழைக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ரூபாவின் பெறுமதி உயர்வு!

கொழும்பு, ஜூன் 19

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி கடந்த வெள்ளிக்கிழமையுடன் ஒப்பிடும்போது நேற்று சற்று உயர்ந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகப்பூர் நாணய மாற்று விவரங்களுக்கு அமைவாக, அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான இலங்கை ரூபாவின் கொள்வனவு பெறுமதி நேற்று 296.82 ரூபாவாகவும், விற்பனைப் பெறுமதி 305.19 ரூபாவாகவும் உள்ளது.

நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான இலங்கை ரூபாவின் கொள்வனவு பெறுமதியானது 296.86 ரூபாவாகவும், விற்பனைப் பெருமதி 305.23 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது.

ஏனைய பல வெளிநாட்டு நாணயங்களுக்கு நிகராகவும் இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்ந்துள்ளது. (அ)

# வலி.வடக்கில் படிப்படியாக காணிகள் விடுவிக்கப்படும்

## பிரிட்டன் தூதுவரிடம் வடக்கு ஆளுநர்



யாழ்ப்பாணம், ஜூன் 19

வலிகாமம் வடக்கு பிரதேசத்தில், எதிர்காலத்திலும் படிப்படியாக காணிகள் விடுவிக்கப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் அன்ரூ பட்ரிக், நேற்று ஆளுநர் செயலகத்தில், வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இங்குள்ள முதலீட்டாளர்களை சந்தித்துக் கலந்துரையாடியதாக குறிப்பிட்ட தூதுவர், முதலீட்டுக்கான சந்தர்ப்பங்கள் தொடர்பில், ஆளுநரிடம் வினவினார்.

வடக்கில் அமையப்பெறவுள்ள, மூன்று முதலீட்டு வலயங்களினதும் உட்கட்டுமான அபிவிருத்திக்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும், வேலை வாய்ப்பு தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அவை அவசியம் எனவும், ஆளுநர் குறிப்பிட்டார்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர், முதலீட்டாளர்கள் அதிகளவில் வருகின்றனர் எனவும், இளையோரிடத்தில் புலம்பெயர்வுக்கான சிந்தனை மேலோங்கி இருக்கின்றது என்பதையும் சுட்டிக்காட்டிய ஆளுநர், அவர்களுக்கான வேலை வாய்ப்புக்கள் இங்கே உருவாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்திலேயே, முதலீட்டு வலயங்களை அமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

சுற்றுலாப் பயணிகளின் வருகை தொடர்பிலும், விமான சேவை மற்றும் கப்பல் சேவைகள் தொடர்பிலும், பிரித்தானிய தூதுவர் கேட்டறிந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையிலான உள்ளூர் விமான சேவை ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், கட்டுநாயக்காவுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான விமான சேவையை ஆரம்பிப்பது, பெருமளவு சுற்றுலாப் பயணிகளுக்கு உதவக்கூடியதாக இருக்கும் எனக் குறிப்பிட்ட ஆளுநர், இதற்குரிய கோரிக்கை அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.


காணி உரித்து நிர்ணய திணைக்களத்தால் வெளியிடப்பட்ட வர்த்தமானி, தையிட்டி விகாரை விவகாரம் மற்றும் செம்மணி புதைகுழி அகழ்வு என்பன தொடர்பாகவும், பிரித்தானிய தூதுவர் கேட்டறிந்து கொண்டார்.

கடந்த காலங்களில், பிரித்தானிய அரசாங்கம், ஐ.நா முகவர் அமைப்புக்கள் ஊடாக பல்வேறு நிதி உதவிகளை வழங்கியதை நினைவுகூர்ந்த ஆளுநர், தற்போதும் இந்தியாவில் இருந்து நாடு திரும்ப எதிர்பார்த்துள்ள அகதிகளுக்கான வாழ்வாதாரத்திற்கு உதவிகள் தேவை என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

பிரதான வீதிகள் புனரமைக்கப்பட்டிருந்தாலும், கிராமிய வீதிகள், கிராமிய உட்கட்டுமானங்களுக்க ான தேவைகள் மற்றும் பின்தங்கிய மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கான தேவைப்பாடுகள் இன்னமும் அதிகமாக இருப்பதாகவும், வடக்கு மாகாண ஆளுநர் தெரியப்படுத்தினார்.

இந்தச் சந்திப்பில், ஆளுநரின் செயலாளர் மற்றும் ஆளுநரின் இணைப்புச் செயலாளர் ஆகியோர் பங்கேற்றனர். (அ)

# ரில்வின் தலைமையிலான ஜே.வி.பி குழு சீன வெளியுறவு அமைச்சருடன் சந்திப்பு



கொழும்பு, ஜூன் 19

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அழைப்பின் பேரில், சீனாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தலைமையிலான பிரதிநிதிகள் குழு, சீன வெளிவிவகார அமைச்சர் லியு ஜியான்சாவோவை சந்தித்து கலந்துரையாடினர்.

பீஜிங்கில் உள்ள சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேசத் துறை தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இதில் சீனாவின் பதில் வெளிவிவகார அமைச்சர் சன் ஹையான் உட்பட பல உயர்மட்ட சீன அதிகாரிகள் பங்கேற்றனர்.

சீன வெளியுறவு அமைச்சர் லியு ஜியான்சாவ், சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஜேவிபிக்கும் இடையிலான நீண்டகால நட்பை மீண்டும் உறுதிப்படுத்தினார்.

இது பிரிக்கவோ அல்லது குறைமதிப்பிற்கு உட்படுத்தவோ முடியாத ஒரு பிணைப்பு என்று கூறினார்.

நாட்டின் இறையாண்மையை மதிக்கும் அதே வேளையில் இலங்கையின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்க சீனா தயாராக இருப்பதாகவும், சீனா மற்ற நாடுகளின் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் செயல்களில் ஈடுபடுவதில்லை என்றும் அவர் கூறினார்.

இந்த விஜயமானது இரு கட்சிகளுக்கும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்ப டுத்தும் என்று ரில்வின் சில்வா இதன்போது குறிப்பிட்டார்.

இலங்கைக்கு சீனா தொடர்ந்து அளித்து வரும் ஆதரவிற்கு அவர் நன்றி தெரிவித்ததோடு, நாடுகளுக்கு இடையே உருவாகியுள்ள பரஸ்பர புரிதலை ஜே.வி.பி மதிக்கிறது என்றும் கூறினார்.

தலைவர் மாவோ சேதுங்கின் சகாப்தத்திலிருந்து ஜனாதிபதி ஜி ஜின்பிங் வரையிலான சீனாவின் வளர்ச்சிப் பயணம் குறித்த தூதுக்குழுவின் நேர்மறையான பதிவுகளையும் ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் பகிர்ந்து கொண்டார். (அ)

# இந்தோனேசியாவுக்கு வருகை தருமாறு அநுரவுக்கு அழைப்பு!

கொழும்பு, ஜூன் 19

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்காவை இந்தோனேசியாவுக்கான உத்தியோகபூர்வ

விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான இந்தோனேசியா தூதரகத்தின் தூதுவர் தேவீ கெஸ்டினா டெப்பிங் மற்றும் பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் மு.ஏ. சமந்த வித்யாரத்தன பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் ஆகியோர்களுக்கிடையிலான இலங்கையின் பெருந்தோட்ட விவசாய மற்றும் தெங்கு உற்பத்திகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன் தினம் பத்தரமுல்லையில் அமைந்துள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றிருந்தது.

இவ் கலந்துரையாடலின்போது" இலங்கையின் பெருந்தோட்ட விவசாயத் துறையில் காணப்படுகின்ற வளர்ச்சி விசேடமாக தெங்கு, நெல், சோளம், உற்பத்திகளில் இரு நாடுகளுக்கு இடையிலான அனுபவங்கள் மற்றும் ஒத்துழைப்புகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக தெங்கு உற்பத்தியில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தல், அதனோடு இணைந்த இதர உற்பத்திகளை விருத்தி செய்தல் தொடர்பாகவும் இரசாயன உரங்கள் மற்றும் சேதன பசளைகள் மூலம் எவ்வாறான பயன்களை பெற்றுக் கொள்வது, சோளம் மற்றும் நெல் உற்பத்திகளில் எவ்வாறு தன்னிறைவை அடைவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலின்போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்காவை இந்தோனேசியாவிற்கான உத்தியோகபூர்வ

விஜயமொன்றை மேற்கொள்ளுமாறும் தூதுவர் தேவீ கெஸ்டினா டொபிங் அழைப்பு விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.